Follow us

# தமிழன்

THAMILAN තමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 05 சோபகிருது வருடம், ஆனி மாதம் 13ஆம் திகதி புதன்கிழமை

(28.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 09, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## மகாவமிசத்துக்கு யுனெஸ்கோ அங்கீகாரம்!

'மகாவமிசத்தை' உலக நினைவக மரபுரிமை ஆவணமாக யுனெஸ்கோ அமைப்பு அறிவித்துள்ளது.

மகாவமிசம் என்பது லக்தீவ மகா விகாரையின் வரலாறு மற்றும் இராஜரட்டை இராச்சியத்தின் வரலாறு பற்றி மஹாநாம தேரரால்...

02 பக்கம்

## முஸ்லிம் பாடசாலைகளுக்கு வெள்ளியன்று விடுமுறை

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு நாட்டிலுள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளுக்கும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அது தொடர்பான சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்கவினால் அனைத்து மாகாண பிரதம, கல்விச் செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள் மற்றும்...

02 பக்கம்

# கடன் மறுசீரமைப்பால் எந்த பாதிப்புமில்லை!

## அரச, தனியார் வங்கிகள் உட்பட நாட்டின் வங்கிக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மைக்கு தாக்கமில்லை என்கிறார் ஜனாதிபதி ரணில்



உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பினால் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் உள்ள அரச, தனியார் வங்கிகள் உட்பட நாட்டின் வங்கிக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட செயலக புதிய கட்டடத் திறப்புவிழாவில் நேற்று (27) கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

மேலும் வெளிநாட்டு, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகள் நாளை நடைபெறும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டுக் கடனில் 17 பில்லியன் டொலர்களை மறுசீரமைக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதற்கேற்ப உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பினால் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகள் உட்பட நாட்டின் வங்கி முறையின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாது.

மேலும், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பினால் வங்கி வைப்புகளுக்கோ தற்போது செலுத்தப்படும் வட்டித் தொகைக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

நாட்டில் 50 மில்லியனுக்கும் அதிகமான...

02 பக்கம்

## துறைமுக நகரில் சீனா முதலீடு

■ த. யுவராஜ்



கொழும்புத் துறைமுக நகரத்தில் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளதாக சைனா ஹார்பர் இன்ஜினியரிங் கோப்பரேசன் தெரிவித்துள்ளது.

பெய்ஜிங்கில் உள்ள...

02 பக்கம்

## இன்று கூடுகிறது விசேட அமைச்சரவை

■ நா.தினுஷா

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இன்று (28) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட அமைச்சரவைக் கூட்டமொன்று இடம்பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கமைய, தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கத் தரப்பின் நிலைப்பாடும் இன்று அமைச்சரவையில் முன்வைக்கப்படலாம் என்று தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் (26) அமைச்சரவை கூடியிருந்தாலும் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகள் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்காமையினால், அந்த யோசனைகள் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர்...

02 பக்கம்

## ஆளுங்கட்சி உறுப்பினர்களை இன்று சந்திக்கிறார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இன்று (28) விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று மாலை 05 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு குறித்தும் அது தொடர்பான பாராளுமன்ற விவாதம் குறித்தும் இதன்போது ஆராயப்படவுள்ளது.

## பதவி ஆசை கிடையாது

### கூறுகிறார் சந்திரசேன எம்.பி.

■ நா.தினுஷா

அமைச்சுப் பதவிகளை கொடுத்தால் நாட்டுக்காக பணியாற்றுவோம். பதவி கிடைக்கவில்லை என்பதற்காக கவலையில் கண்ணீர் வடிக்கும் தரப்பினர் நாங்கள் இல்லை. வெற்றியோ தோல்வியோ உறுதியான அரசியலில் நாங்கள் ஈடுபடுவோம். அதற்காக, சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை என்ற அதிருப்தியும் எங்களுக்கு இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (27) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கை யில், எங்களது கட்சி நடவடிக்கைகளை மிகவும் ஆர்வத்துடன் முன்னெடுத்து வருகின்றோம். எங்களுக்கு எந்த அதிருப்தியும் இல்லை. இருந்தபோதும், சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு பதவிகள் வழங்கப்படும் என்று கடந்த காலங்களில்...

02 பக்கம்

## ஹங்குராங்கெத்த பொலிஸ் நிலையம் இரவில் சுற்றிவளைப்பு

### பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு

■ எஸ்.கணேசன்

சந்தேகநபர்கள் சிலரை கைது செய்யாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 200க்கும் அதிகமானோர் ஹங்குராங்கெத்த பொலிஸ் நிலையத்தை சுற்றிவளைத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் (26) இரவு இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக பாதுகாப்புக் கருதி பொலிஸார் வானத்தை நோக்கி 38 தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

நுவரெலியா, ஹங்குராங்கெத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியதிலகபுர பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் தாக்குதலுக்கு இலக்காகி காயங்களுக்குள்ளான நிலையில் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 25ஆம் திகதி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார்,...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



கடன் மறுசீரமைப்பு செய்யுறபோது வங்கிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் எங்களுக்கு கவலையில்லை... ஏனெண்டா வங்கியில் வைக்கிற அளவுக்கெல்லாம் மக்களிட்ட காசில்ல பாருங்கோ..

## முடிவுக்கு வந்த மாயாஜாலங்கள்

### ராஜபக்ஷக்கள் மீது சம்பிக்க சாடல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன படிப்படியாக அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலையை அடைந்து வருகிறது.

02 பக்கம்

## சனிக்கிழமையும் கூடும் பாராளுமன்றம்

### விசேட வர்த்தமானி வெளியானது

02பக்கம்

## உஷ்



ஜனாதிபதி ரணிலுக்கு அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெற்று எதிர்க்கட்சியில் அமர்வது நல்லதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் ஆரம்பிக்கப்பட்ட பேச்சு இப்போது தீவிரமடைந்துள்ளதாக தகவல்.

இப்போது எதிர்க்கட்சியில் அமர்ந்தால் மட்டுமே அடுத்த தேர்தலில் வெல்லலாம் என்று பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பொதுஜன பெரமுனவின் மேல்மட்ட தலைவர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளனராம்.

எப்படியோ கொழும்பு அரசியலில் விரைவில் பிரளயம் ஏற்படுமென்று உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.


அதிதுரித

Dialog HOME BROADBAND

வீட்டிற்கு Wi-Fi ரீலோட்




இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-

மாதத்திற்கு 20GB ரூ.540/-

2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-

செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்

Dialog

எதிர்காலம் இன்றே.

# வரவு–செலவுத்திட்ட அலுவலக சட்டமூலம்

## சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்



பாராளுமன்றத்தில் கடந்த வாரம் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலக சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (27) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

பொது நிதியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட பாராளுமன்றத்துக்கு சுயாதீனமான, பாரபட்சமற்ற பொருளாதார மற்றும் நிதிப் பகுப்பாய்வு, வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய பார்வையுடன் பொது நிதிப் பொறுப்புகளை நிறைவேற்ற உதவும் நோக்கத்துடனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு உதவுவதை நோக்காகக் கொண்டும் இது நிறுவப்பட்டுள்ளது.

அத்துடன், அண்மையில் நிறைவேற்றப்பட்ட குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்திலும் சபாநாயகர் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய, இந்த இரண்டு சட்டமூலங்களும் 2023ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட அலுவலக சட்டம், 2023ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமாக நடைமுறைக்கு வருகின்றன.

சான்றுரைப்படுத்தும் நிகழ்வில் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானீ ரோஹணதீர மற்றும் சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரும் மற்றும் பதில் தொடர்பாடல் பணிப்பாளருமான ஜனகாந்த சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### கடன் மறுசீரமைப்பால்...

வங்கி வைப்பாளர்களின் எந்தவொரு வைப்புத் தொகை அல்லது அதற்கான வட்டியில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

வெளிநாட்டு, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகள் நாளை (இன்று) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

உள்நாட்டு கடனை மறுசீரமைப்பதன்மூலம் ஊழியர் சேமலாப நிதியம் உட்பட எந்தவொரு பொதுநிதியின் அங்கத்துவ மீதி பாதிக்கப்படாது. நாட்டில் கடந்த காலங்களில் செலுத்தப்பட்ட உயர் ஓய்வூதிய நிதியில் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது. மேலும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பானது அரச, தனியார் வங்கிகளின் ஸ்திரத்தன்மையை பாதிக்காது.

நாட்டின் கடனை மறுசீரமைக்காமல் பேணினால் 2035ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 வீதத்துக்கும் அதிகமான பொதுக்கடன் இருக்கும். வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் கடனை மறுசீரமைக்க ஏற்கனவே உறுதியளித்துள்ளனர்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின்போது வங்கி முறைமை வீழ்ச்சியடையாது என்றார்.

### முஸ்லிம்...

முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்களுக்கு நேற்று (27) அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விடுமுறை தினத்துக்கு பதிலாக எதிர்வரும் ஜூலை மாதம் 08ஆம் திகதி சனிக்கிழமையன்று பாடசாலையை நடத்துமாறும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

### துறைமுக நகரில்...

அந்நிறுவனத்தின் தலைமையகத்தில் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் நிறுவனத் தலைவர் பாய் யின்ஸான் ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் (26) இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச நிதித்துறையுடன் சைனா ஹார்பர் இன்ஜினியரிங் கோப்பரேசன் தனது முதலீடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக சீனாவில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு சீனாவின் எக்சிம் வங்கி ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்துள்ளது.

அந்த வகையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சீனாவின் எக்சிம் வங்கியின் தலைவரைச் சந்தித்து, தற்போது நடைபெற்று வரும் கடன் மறுசீரமைப்பு செயல்முறை குறித்து விளக்கமளித்திருந்தார்.

அத்தோடு அமைச்சர் அலி சப்ரி, சினோபெக் நிறுவனத்தின் தலைவர் மா யோங்ஷெங்கை தியான்ஜினில் சந்தித்து இலங்கையில் முதலீடுகள் மற்றும் கூட்டுறவில் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாட்டிறைச்சிக்கு கெக்கிராவவில் தடை

அநுராதபுரம் செய்தியாளர்

கால்நடைகளுக்கு பரவும் தோல்நோய் காரணமாக அநுராதபுரம் கெக்கிராவ சுகாதார அதிகாரி பிரிவில் மாடறுத்தல், மாட்டிறைச்சி விற்பனை செய்தல், விநியோகித்தல் ஆகியவற்றுக்கு அதிகாரிகளால் தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள அனைத்து இறைச்சி விற்பனை நிலையங்களையும் உடனடியாக மூடுமாறு கெக்கிராவ சுகாதார அதிகாரி வைத்தியர் அசித கோரள பிரதேச சபைக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கால்நடைகளில் அடையாளங்காணப்பட்ட தோல் நோய் கெக்கிராவ பகுதியிலும் பரவியுள்ளதால் சுகாதாரத் துறையினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் அனுமதியை புதுப்பிக்க ஒரு இலட்சம் ரூபா அறவீடு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலைய அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு இலட்சம் ரூபாவை உடனடியாக செலுத்த வேண்டும் என்று அறிவித்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிநிதியொருவருடன் முதன் முறையான ஒப்பந்தம் மேற்கொள்பவராக இருந்தால் 18ஆயிரம் ரூபாவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஒரு பிரதிநிதியுடன் இரண்டாவது அல்லது மூன்றாவது முறையாக சேவை ஒப்பந்தமொன்றை புதுப்பித்துக்கொள்ள வேண்டிய பிரிவினர் 3ஆயிரத்து 600 ரூபாவையும் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# டிஜிட்டலில் மின் பட்டியல்

## மூன்று பிரதேசங்களில் அறிமுகம்

மின்சார பாவனையாளர்களுக்காக ஜூலை முதலாம் திகதி முதல் மூன்று பிரதேசங்களுக்கு டிஜிட்டல் முறையில் மின்சாரப் பட்டியல் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறுஞ்செய்திகள் அல்லது மின்னஞ்சல்மூலம் மின்சாரப் பட்டியலை பெற்றுக்கொடுக்க இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

தெஹிவளை, களனி மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகிய பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள மின்சார பாவனையாளர்களுக்காக இந்த முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

# கொழும்பு – யாழ். ரயில் சேவை ஜூலை 15 முதல்

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு – யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஜனவரி 5ஆம் திகதிமுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு ரயில் மார்க்கத்தின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற திருத்தப்பணிகள் காரணமாக கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான நேரடி ரயில் சேவை அநுராதபுரம் ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தியாவின் நிதி உதவியுடன் வடக்கு ரயில் மார்க்க திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. திருத்த வேலைகள் முடிந்த பின்னர் காங்கேசன்துறையில் இருந்து அநுராதபுரத்துக்கு மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயில்கள் பயணிக்க முடியும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி வடக்கு ரயில் சேவையை மீள ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசனப் பதிவுகள் உள்ளிட்ட மேலதிக விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களின் பின்னர் இறுதி முடிவு எட்டப்படும் என ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் சமன் பொல்வத்தகே தெரிவித்தார்.

### இன்று கூடுகிறது...

இதுதொடர்பில் வியாழக்கிழமை வங்கி துறையுடன் கலந்துரையாடியதன் பின்னர் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று (27) காலை 11.30 மணியளவில் இடம்பெறவிருந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 09 மணிவரை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான ஆளுங்கட்சி கூட்டமொன்றும் இன்று இடம்பெறவுள்ளது. இந்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் பலர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன் இதன்போது தேசிய கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட அசுவெசும நலன்புரி கொடுப்பனவு தொடர்பிலும் முக்கிய கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஹங்குராங்கெத்த...

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் பெண் ஒருவரை கைதுசெய்து விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 08 சந்தேக நபர்கள் அந்த பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன், அவர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வந்தநிலையில், நேற்று முன்தினம் இரவு சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்வாறு கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பில் அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளதுடன் மேலும் ஆத்திரமடைந்த சிலர் பொலிஸ் நிலையத்தின் பிரதான நுழைவாயிலை உடைத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்துக்குள் நுழைய முயற்சித்துள்ளனர்.

அவர்களில் அநேகமானவர்கள் மதுபானம் அருந்தியிருந்தமையை பொலிஸ் உறுதிப்படுத்தியிருந்ததாக தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பிரிவு, அந்த இடத்திலிருந்த சிலரினால் பொலிஸ் நிலையத்துக்கு கல்வீச்சு தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

அந்த தரப்பினரின் அமைதியற்ற செயற்பாடுகளுக்கமைய, அவர்கள் பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்தால் ஏற்படும் ஆபத்து மற்றும் கடமையிலிருந்த அதிகாரிகளின் பாதுகாப்பு நலனை கருத்தில்கொண்டு நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் உத்தரவுக்கிணங்க, பொலிஸ் அதிகாரிகள் இருவரால் வானத்தை நோக்கி 38 துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அங்கு அமைதியின்மையை ஏற்படுத்தியிருந்த நபர்கள், பொலிஸ் நிலையத்துக்குள் உள்நுழையும் முயற்சியை கைவிட்டுவிட்டு ஹங்குராங்கெத்த - கண்டி பிரதான வீதியில் காத்திருந்து ஒரு மணிநேரம் வரையில் எதிர்ப்பு தெரிவித்து பின்னர் அங்கிருந்து கலைந்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிர்ச்சேதம் அல்லது நபர்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்பதுடன் பொலிஸ் நிலையத்தின் பிரதான நுழைவாயில் தகர்த்தப்பட்டமையினால் சொத்து சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு, அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட நபர்களை அடையாளங்கண்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஹங்குராங்கெத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜுலை 10க்கு முன்னர் மேன்முறையீடு செய்க!

## அஸ்வெசும தொடர்பில் அரசியல் குழுக்களின் அழுத்தங்களில் சிக்க வேண்டாமென்கிறார் இராஜாங்க அமைச்சர் சேமசிங்க



பல்வேறு அரசியல் குழுக்களின் அழுத்தங்களில் சிக்காமல் பயனாளிகள் பட்டியலில் பெயர்கள் இடம்பெறாத அனைத்து விண்ணப்பதாரர்களும் ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்குமாறும் மேன்முறையீட்டு காலம் முடிவடைந்த பின்னர் தகுதியானவர்களின் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

'அஸ்வெசும' சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார மீட்சி தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம் தொடர்பில் சமூகத்தில் சில தரப்பினர் மேற்கொள்ளும் தவறான பிரசாரங்களினால் குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், பகிரங்கப்படுத்தப்பட்ட பட்டியல் இறுதிப் பட்டியல் அல்ல என்றும் தெரிவித்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் கூறியதாவது,

நாடு கடந்த காலத்தில் பாரிய பொருளாதார வீழ்ச்சியை சந்தித்தது. அந்நிலையில் இருந்து நாட்டை மீட்பதில் முக்கிய அங்கமாக வறிய மக்களை பாதுகாக்கும் நோக்கில் அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகள் திட்டம் தொடங்கப்பட்டது.

பொதுவாக, நம் நாட்டில் சமூகநலத் திட்டத்தில் சேர்க்கப்படும் நபர்கள் பலப்படுத்தப்பட்டு, பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, ஆயுட்காலம் முழுவதும் அந்தப் பலன்களைச் சார்ந்து செயல்படும் முறையே எப்போதும் இருந்து வருகிறது. ஆனால் இந்தத் திட்டம் அதற்கு மாற்றமான ஒரு திட்டம் என்றே சொல்ல வேண்டும்.

2001ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலப் பலன்கள் சட்டத்தின்படி, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 06 துறைகளின் பிரகாரம் குறிகாட்டிகளின் கீழ் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இதன்படி, தகுதியான பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இது இறுதிப் பட்டியல் அல்ல என்பதை வலியுறுத்த வேண்டும்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் பெயர் உள்ளடங்காத நபரோ அல்லது குடும்பத்தாரோ இருப்பின் மேன்முறையீட்டு காலத்துக்குள் தங்களின் மேன்முறையீடுகளை பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், அதில் தகுதியற்றவர்களின் பெயர் இடம்பெற்றிருந்தால், அது குறித்தும் ஆராயப்படும்.

பல்வேறு பிரசாரங்கள் அல்லது தனிப்பட்ட அழுத்தங்கள் காரணமாக மக்கள் பீதியடைய வேண்டாம் என்றும், சில அரசியல் குழுக்களின் தேவைக்காக போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம். மேலும், அரசினால் அறிவிக்கப்பட்ட முறைக்கு ஏற்ப அனைவரும் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எவ்வாறாயினும், மேன்முறையீட்டு காலம் முடிவடைந்த பிறகு அஸ்வெசும சமூக நலப் பயனாளிகளின் இறுதிப் பட்டியலைத் தயாரிக்க எதிர்பார்க்கிறோம். எவருக்கும் அநீதி ஏற்பட இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதுதவிர, சிறுநீரக உதவித்தொகை, ஊனமுற்றோர் உதவித்தொகை மற்றும் முதியோர் உதவித்தொகை பெறும் பயனாளிகளின் பட்டியலையும் விரைவில் வெளியிட எதிர்பார்க்கிறோம் என்றார்.

# "இலங்கைக்கு வாங்க"

## பிரான்ஸில் தமிழில் பேசிய ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸில் நடத்திய சந்திப்பின்போது இலங்கைத் தமிழர் ஒருவர் ஆங்கிலத்தில் எழுப்பிய கேள்வி புரியவில்லையென்றும் அவரை தமிழில் கேள்வியெழுப்புமாறும் தனக்கு தமிழ் தெரியுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸில் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போது, தமிழர் ஒருவர் சற்று நீண்டதாக சில விடயங்களை ஜனாதிபதிக்கு சொல்ல முயன்றார்.

இலங்கையில் நடந்த இனப்படுகொலை விவகாரத்திலேயே முதல் நடவடிக்கையெடுக்க வேண்டுமென வலியுறுத்தினார். இலங்கை அரசாங்கம் ஜனநாயகமானது என்று தான் நம்பவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தனது பாணியில், அந்த தமிழர் என்ன கூற முயற்சிக்கின்றார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை எனவும் ஆங்கிலம் தெரியாவிட்டால் தமிழில் பேசுமாறும் கேட்டுக்கொண்டார்.

தனக்கு தமிழ் தெரியும் என்றும் ஜனாதிபதி கூறினார். அதன் பின்னர் அந்த நபர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார். அதற்கு எந்த பதிலும் அளிக்காத ஜனாதிபதி, 'இலங்கைக்கு வாங்க' என்றார்.

### மகாவமிசத்துக்கு...

பாலி மொழியில் எழுதப்பட்ட ஒரு காவியமாகும். அது வரலாறை தழுவிய ஒரு கற்பனாவாத காவியம் என குறிப்பிடுவோரும் உள்ளனர்.

இது கி.மு. 06ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 1815 வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியதாக இயற்றப்பட்டுள்ளது.

அதன்படி, 2023ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் வெளியிடப்பட்ட உலக நினைவக சர்வதேச ஆவணத்தில், 64 புதிய ஆவண மரபுரிமையில் மகாவமிசமும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பதவி ஆசை...

ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன.

அமைச்சுப் பதவிகளை கொடுத்தால் நாட்டுக்காக பணியாற்றுவோம். பதவி கிடைக்கவில்லை என்பதற்காக கவலையில் கண்ணீர் வடிக்கும் வகுப்பினர் நாங்கள் இல்லை. நாங்கள் வெற்றி, தோல்வி, பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பலத்துடன் அரசியல் செய்யும் தரப்பினர். அதனால், அமைச்சுப் பதவிகள் இல்லை என்பதற்காக அதிருப்தியடையப் போவதில்லை. பொறுப்பில் இருப்பவர்கள் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம். அவர்கள் செய்யவில்லை என்பதற்காக அரசியலிலிருந்து செல்லப்போவதும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரின் காலத்தில் முதலில் அமைச்சரவையை நியமித்தார். அதன் பின்னர் அவர்களை நீக்கிவிட்டு புதிய குழுவொன்றை அந்தப் பதவிகளுக்கு நியமித்தார். அதேபோன்று, சிரேஷ்ட உறுப்பினர்கள் தொடர்பில் கவனம் செலுத்தவும் இல்லை. இதுவே தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதனையே செய்கிறார்.

### முடிவுக்கு வந்த...

ராஜபக்ஷக்களின் மாயாஜாலங்கள் முடிவுக்கு வந்துவிட்டன. மீண்டும் மஹிந்தவை ஆதாரமாக கொண்டு அரசியலில் ஈடுபட முடியாது. நெலும் மாவத்தை அலுவலகத்தை மூடுவதற்கான காலம் வந்துவிட்டது. அவர்கள் அரசியல் ரீதியாக பின்னடைவை சந்தித்து விட்டார்கள். மேலும், ராஜபக்ஷக்களின் பெயரில் அரசியலில் ஈடுபட முயற்சித்தால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குரியாகும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடன்கள் மறுசீரமைப்பு நிச்சயமாக செய்யப்பட வேண்டும். ஆனால், அதற்கு முன்னர் நிதி, பொருளாதார நீதியை நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இடம்பெறாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடன் மறுசீரமைப்புக்கு எங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொடுக்க மாட்டோம்.

பொருளாதார நீதியைக் கோரி எதிர்காலத்தில் மக்கள் வீதிக்கு இறங்குவார்கள். அந்த மக்கள் போராட்டத்துக்கு நிச்சயமாக ஐக்கிய குடியரசு முன்னணி ஆதரவளிக்கும். பொருளாதார நீதிக்காக பிரிவொன்று இந்த நாட்டுக்கு மிக அவசியமாக இருக்கிறது.

ஏழை மக்களுக்காக பெற்றுக்கொடுக்கப்படும் சமுர்த்தி அல்லது திவிநெகும வேலைத்திட்டங்களினூடாக நிதியுதவி, 20 வீதமாக இருக்கும் ஏழை மக்களில் 48 சதவீதமானவர்களுக்கே இந்த கொடுப்பனவு வழங்கப்படுகிறது என்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உயர் வருமானம் பெறும் நபர்களுக்கும் இந்த உதவி கிடைக்கிறது. ஆகவே, இந்த உதவி தொகை நீதியான முறையில் அந்த மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் பொதுஜன பெரமுனவினருக்கும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுத்தார்களே தவிர உண்மையான ஏழை மக்களுக்கு சமுர்த்தி வழங்கப்படவில்லை. அதற்கமையவே, அசுவெசும வேலைத்திட்டம் கொண்டுவரப்பட்டது. எங்களுக்கு தெளிவுப்படுத்தப்பட்ட வகையில் மிகவும் விஞ்ஞானபூர்வமாகவே இந்த வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களினதும் ஐக்கிய தேசியக் கட்சியினரினதும் கருத்துகள் இந்த சந்தர்ப்பத்தில் அவசியமில்லை. புதிதாக ஏழையாகியுள்ள நபர்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கவுள்ளது. உலக வங்கியின் தலையீட்டின் காரணமாக இந்த நிவாரணக் கொடுப்பனவு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

கட்சி பேதமின்றி உண்மையான ஏழைகளை கண்டிருந்து அவர்கள் தொடர்பில் நிவாரணத்தை வழங்க தொடர்ச்சியான கணிப்புகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு முழு ஒத்துழைப்பை வழங்க நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன படிப்படியாக அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலையை அடைந்து வருகிறது. ராஜபக்ஷக்களின் மாயாஜாலங்கள் முடிவுக்கு வந்துவிட்டன. மக்களின் மனங்களில் ராஜபக்ஷக்களின் பெயர் வைராக்கியத்தை சந்தித்துள்ளது. ஆகவே, மீண்டும் மஹிந்தவை ஆதாரமாகக்கொண்டு அரசியலில் ஈடுபட முடியாது.

அதேபோன்று அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்காக பொதுஜன பெரமுனவின் அநேகமான உறுப்பினர்கள் ஒன்று திரண்டுள்ளார்கள். தனியான அலுவலகங்களையும் அமைத்துக்கொண்டு கூட்டணி அமைத்து வருகிறார்கள்.

அதன் சுமை அவர்களுக்கு தெரிவதால் ஜனாதிபதி வேட்பாளரை முன்நிறுத்துவதாகவும் தெரிவித்து ரணிலின் கவனத்தை தம் மீது திருப்பிக்கொள்ள முற்சித்து வருகிறார்கள்.

எனவே, மஹிந்த ராஜபக்ஷ - ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான புரிந்துணர்வின் தன்மை, ஊடக சந்திப்புகளை நடத்துபவர்களுக்கு தெரியாது. அவர்களின் யுகம் முடிந்துவிட்டது. நெலும் மாவத்தை அலுவலகத்தை மூடுவதற்கான காலம் வந்துவிட்டது. அவர்களின் கிராமிய சமுர்த்தி படையை ஜூன் முதலாம் திகதியிலிருந்து உரிமையாக்கி கொண்டார்.

ஆகையால், இதுகுறித்து சிந்திக்க வேண்டியதில்லை. அவர்கள் அரசியல் ரீதியாக பின்னடைவை சந்தித்து விட்டார்கள். மேலும், ராஜபக்ஷக்கள் இல்லாமல் புதிய தூரநோக்கு கொண்ட பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு அரசியலில் எதிர்காலம் இருக்கிறது. அவ்வாறு இல்லாமல் ராஜபக்ஷக்களின் நாமத்தின் பின்னால் செல்பவர்களுக்கு அரசியல் எதிர்காலம் இருக்காது என்றார்.

### சனிக்கிழமையும்...

எதிர்வரும் சனிக்கிழமை பாராளுமன்றத்தை கூட்டுவதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வெளியிட்டுள்ளார். அதன்படி, சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடும். பாராளுமன்றம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமா இல்லையா என்பது குறித்து வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறும் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

இதேவேளை, கட்சித் தலைவர்கள் கூட்டம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 மணிக்கு நடைபெற உள்ளது.

# குடிநீர் விநியோகத்தை இடைநேரத்துடன் நிறுத்தும் வலி. மேற்கு பிரதேச சபை

## மக்கள் கவலை

வலி. மேற்கு பிரதேச சபையின் குடிநீர் விநியோக நடவடிக்கையானது பிற்பகல் 1 மணிக்கு முன்னர் இடைநிறுத்தப்படுவதாகவும் இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

ஆலயம் ஒன்றின் பொது நிகழ்வுக்கு, ஆலய நிர்வாகத்தினர் வலி. மேற்கு பிரதேச சபை செயலாளரிடம் குடிநீரை வழங்குமாறு கோரினர். இதன்போது செயலாளர் குடிநீருக்கு பொறுப்பானவரின் தொலைபேசி இலக்கத்தை வழங்கினார். அதன்பின்னர் ஆலய நிர்வாகத்தினர் குடிநீருக்கு பொறுப்பானவருக்கு அழைப்பை ஏற்படுத்தி ஆலய தேவைக்கு குடிநீர் வழங்குமாறு கோரினர். ஆனால் குறித்த பொறுப்பாளர் தண்ணீர் வழங்கும் ஊழியர்கள் தமது கடமை நேரத்தை முடித்துவிட்டு சென்றுள்ளதாக கூறினார்.

குடிநீர் வழங்குபவர்களது சேவையானது காலை 6.30 தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை என அறியமுடிகிறது. ஆனால் அவர்கள் ஒரு மணிக்கே வேலையை முடித்துவிட்டு சென்றுள்ளதாக கூறப்பட்டது.

அதன்பின்னர் பிரதேச சபையின் செயலாளருக்கு தொலைபேசி அழைப்பு மேற்கொண்ட போது, அவர்கள் ஆறு மணிக்கு சேவைக்கு வருவதாகவும் எட்டு மணித்தியால கடமையை பூர்த்தி செய்துவிட்டு செல்வதாகவும் கூறினார்.

அதற்கு ஆலய நிர்வாகத்தினர், 8 மணிக்கு பணிக்கு வந்தால் 2 மணிக்கு தானே 8 மணித்தியாலங்கள் நிறைவடையும் என கூறியபோது தடுமாறிய செயலாளர் இது குறித்து நாளை நேரில் வந்து பேசுமாறு கூறிவிட்டு அழைப்பை துண்டித்தார்.

பிரதேச சபையில் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் செயலாளர்கள் தன்னிச்சையாக செயற்பட ஆரம்பித்துள்ளனர். இதனால் மக்கள் பிரதேச சபையின் மூலம் பெற்றுக் கொள்ளும் அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

# தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் ஊழல் மோசடி

## நடவடிக்கை எடுக்கவேண்டுமென்கிறார் சஜித்





தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. அதன் பணிப்பாளர் சபை பூர்த்தியற்று காணப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரும் செயலாளரும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசாங்க மருந்தாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் நேற்று(27) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்து தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து தெளிவூட்டினர். இச்சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டின் ஔடதம் தொடர்பான சட்ட விதிமுறைகள் ஏற்பாடுகளின் பிரகாரம், மருந்துப் பொருட்களை பதிவு செய்வதற்கான முறையான செயல்முறை உள்ளதாகவும் அவசரகால சூழ்நிலையில் செயல்படுத்தப்பட வேண்டிய முறையொன்று இருந்தாலும் அந்த முறைமையை தவிர்த்து தவறான முறையில் ஔடத அதிகார சபையின் தலைவர் கொள்வனவு செய்திருப்பதாகவும் இதன் காரணமாக தரமற்ற மருந்துப்பொருட்களை சந்தைக்கு விநியோகிக்கும் வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவருக்கு இங்கு அறியக்கிடைத்தது.

இதன் காரணமாக கடந்த காலங்களில் மருந்துப்பொருட்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதாகவும் தமது மருந்து மாபியாவை பாதுகாக்கும் நோக்கில் இந்நிறுவனத்தில் சேவையாற்றிய 23 சிரேஷ்ட உறுப்பினர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களை வெளியிடக்கூடாது என்ற சுற்றுநிருபம் கூட வெளியிடப்பட்டுள்ளமை ஆச்சரியத்துக்குரிய காரணமாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மருந்து விலை ஒழுங்குமுறைக் குழுவை கலைத்து, பிரதம நிறைவேற்று அதிகாரி தன்னிச்சையாக விலை நிர்ணயம் செய்து வருவதாகவும் இந்த மாபெரும் அநியாயத்தை நாட்டுக்கு வெளிப்படுத்துவதாகவும் பாராளுமன்றத்தின் கடமை மற்றும் பொறுப்பின் கீழ் அவர்கள் பதிலளிக்க கடமைப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

எதிர்க்கட்சியாக, 220 இலட்சம் மக்களுக்கும் இந்த ஊழல் கொடுக்கல் வாங்கல் கண்டறிதலை வெளிப்படுத்துவதாகவும் இது நாட்டுக்கு பெரும் பாதகமாக அமையும் என்பதால் ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆராயப்பட்டு இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# சமூகத்துக்கு நன்மை செய்யும் மனப்பான்மை அரச உத்தியோகத்தர்களுக்கு இருக்க வேண்டும்

## யாழ். மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

அரச உத்தியோகத்தர்கள் சமூகத்துக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் என யாழ். மாவட்ட செயலாளர் ஆ .சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குருதி கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச உத்தியோகத்தர்கள் சமூகத்துக்கு நன்மைகளை செய்ய வேண்டும். அது குருதிக்கொடை வழங்குவதிலும் காணப்பட வேண்டும்.

ஏற்கனவே நான் கடமையாற்றிய திணைக்களங்கள் மற்றும் காரியாலயங்களில் அந்தந்த நலன்புரி அமைப்புகளின் ஊடாக இரத்ததான முகாம்களை கட்டாயமாக செய்ய வேண்டும் என அறிவுறுத்தி அந்த நடவடிக்கைக்கு அவர்களை உள்வாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தேன்.

தற்பொழுது நான் மாவட்ட செயலாளராக பதவியேற்ற பின் சகல பிரதேச செயலக பிரிவுகளுக்கும் அந்தந்த பிரிவுகளில் இரத்ததான முகாம்களை நடத்தி இரத்ததான முகாம்களை செயற்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கின்றேன்.

அண்மையிலும் சில பிரதேச செயலகங்களில் இரத்ததான முகாம்கள் இடம்பெற்றிருந்தமை நீங்கள் அறிந்த விடயம்.

இதற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் என்ற வகையில் எங்களுடைய அலுவலகங்கள் தொடர்ச்சியாக தங்களுடைய பங்களிப்பை வழங்கும் என நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.



சிலாபம் மானாவரி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் சமேத இராமலிங்கசுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் கொடியேற்ற நிகழ்வு கடந்த சனிக்கிழமை (24) இடம்பெற்றது. பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக்கொண்டனர்.

**படப்பிடிப்பு:** உடப்பு செய்தியாளர்

# மாணவனை தாக்கிய ஆசிரியருக்கு பிணை

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 8இல் கல்வி பயிலும் மாணவரொருவரைத் தாக்கிய ஆசிரியர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் விவசாய பாடம் கற்பிக்கும் ஆசிரியர் மண்வெட்டியை எடுத்து வருமாறு மாணவன் ஒருவரை பணித்துள்ளார்.

மண்வெட்டியை குறித்த மாணவன் எடுத்துவராத நிலையில் அருகில் இருந்த வேறொரு மாணவன் மண்வெட்டியை எடுத்துச் சென்றுள்ளான். இந்நிலையில் மண்வெட்டி எடுத்துச்செல்லாத மாணவனை ஆசிரியர் தாக்கியுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த மாணவனை பெற்றோர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் பொலிஸார் குறித்த ஆசிரியரை கைது செய்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இதன்போது அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது.

# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதற்கு நடவடிக்கை

## நிபுணர்கள் குழு ஆராய்வு



ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கிணங்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் உள்ளிட்ட நிபுணர்கள் குழுவினர் ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலைக்கு நேற்று விஜயம் செய்து ஆராய்ந்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், அரசியலை தாண்டி எமது இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

இந்த பிரதேச மக்கள் இந்த ஓட்டுத் தொழிற்சாலை இயங்குவதன் மூலம் தமக்கான வேலைவாய்ப்பு கிடைக்கும் என நம்புகின்றார்கள்.

இந்நிலையிலேயே 03 இயந்திரவியல் பொறியியலாளர்கள் குடிசார் பொறியியலாளர் ஒருவர், ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட நிபுணர் குழுவுடன் அங்கு சென்று பார்வையிட்டோம். குறித்த ஓட்டுத் தொழிற்சாலை அரசாங்க கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற நிலையில் இதற்கான சாத்தியகூற்று அறிக்கை ஒன்றை வரைந்து கைத்தொழில் அமைச்சருடன் கலந்துரையாட தீர்மானித்துள்ளோம்.

இதற்காக பாரிய செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. மிகவும் எளிதாக இதனை இயங்க வைக்க முடியும்.

இதன்மூலம் வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை ஏற்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

# சபாநாயகரை சந்தித்த ருமேனிய தூதுக்குழு



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ருமேனியாவின் இராஜாங்க செயலாளரும் வெளிவிவகார அமைச்சின் பிரதியமைச்சருமான ட்ரேயன் ஹிரிஸ்டியா (Traian Hristea) தலைமையிலான தூதுக்குழு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று முன்தினம் (26) பாராளுமன்றத்தில் சந்தித்தது.

இந்தத் தூதுக்குழுவில் ருமேனிய வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் டயானா டேஸ், வெளிவிவகார அமைச்சின் கவுன்சிலர் போக்டன் அல்டியா மற்றும் இலங்கைக்கான ருமேனியத் தூதுவர் கலாநிதி விக்டர் சியுஜ்டியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ருமேனியாவில் இலங்கை தூதரகத்தை அமைக்க எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு இராஜாங்கச் செயலாளர் ட்ரேயன் ஹிரிஸ்டியா இதன்போது பாராட்டுகளைத் தெரிவித்ததுடன் இரு நாடுகளுக்கும் இடையில் உறுதியான ஒத்துழைப்புகளை ஏற்படுத்த இது மிகவும் முக்கியமானது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் தொழில், கல்வி, வர்த்தகம், முதலீடு, சைபர் பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா போன்ற பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கு இது வழியமைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையர்களுக்கு ருமேனியாவில் வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமைக்கு நன்றிகளைத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இலங்கை - ருமேனியா பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதனூடாக எதிர்காலத்தில் உறவுகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் ருமேனியப் பாராளுமன்ற சபாநாயகரின் தலைமையிலான தூதுக்குழுவொன்றை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் சபாநாயகர் அழைப்பு விடுத்தார்.

அதற்கு மேலதிகமாக, இராஜதந்திர தொடர்புகள், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் வேலைவாய்ப்புக்காக செல்வோரின் விசா நடைமுறையில் காணப்படும் சிக்கல்கள் போன்ற விடயங்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பில், இலங்கை - ருமேனியா பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் உறுப்பினர்களான இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான யதாமினி குணவர்தன, மதுர விதானகே, வேலுகுமார், இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரும் பங்கேற்றனர்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 13ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** காதல், திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் நன்மை, தொழில், போட்டிகளால் அதிக இலாபம் உண்டு.

**ரிஷபம்:** நினைத்த காரியத்தில் வெற்றி, நீண்ட நாள் கடனை இன்று அடைப்பீர்கள். எதிரிகள் தலை வணங்கி நடப்பார்கள்.

**மிதுனம்:** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலம், மனம் கெடும்படி நடந்து கொள்ளாதீர்கள்.

**கடகம்:** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதற்கும் அவசரம் வேண்டாம்.

**சிம்மம்:** காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய பொருள்கள் வாங்கி மகிழ்வீர்கள். மன மகிழ்ச்சி உடைய நாள்.

**கன்னி:** குதர்க்கமான பேச்சுக்கள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயல்படவும்.

**துலாம்:** நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். மன நிறைவுடைய நன்நாள்.

**விருச்சிகம்:** செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் காயங்கள் ஏற்படலாம். பிரயாணத்தில் கவனம் வேண்டும்.

**தனுசு:** வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும். தொழிலில் சாதனை நிகழ்த்துவீர்கள்.

**மகரம்:** தொழில் வியாபாரங்கள் சிறக்கும். உங்கள் கீர்த்தி செல்வாக்கு உயரும். எண்ணிய இலாபம் கிடைக்கும்.

**கும்பம்:** திட்டமிட்ட பிரயாணத்தால் நன்மை உண்டு. புதிய நண்பரை சந்தித்து எதிர்பார்த்த உதவிகளைப் பெறுவீர்கள்.

**மீனம்:** வீண் பணவிரயம் ஏற்படும். கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள். எதற்கும் விட்டுக் கொடுத்து போவது நல்லது.

| | |
|---|---|
| **திதி** | : தசமி பி.இ.3.19 வரை பின் ஏகாதசி (வளர்) |
| **நட்சத்திரம்** | : சித்திரை பி.ப.4.00 வரை பின் சுவாதி |
| **யோகம்** | : மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| **நல்லநேரம்** | : மு.ப.8.54–9.54 மணிவரை |
| **ராகுகாலம்** | : 11.54 – 1.24 மணிவரை |
| **எமகண்டம்** | : 7.24 – 8.54 மணிவரை |
| **குளிகை** | : 10.24 – 11.54 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | : மீனம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தனஅதிர்ஷ்டம்** | : ரோஹிணி, அத்தம், திருவோணம், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் (பிறந்தவர்களுக்கு) |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

ஜூனியர் தமிழன்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் மாதிரி வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாளுடனான விசேட பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308 / 0761393805

# தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூன் 28ஆம் திகதி, புதன்கிழமை


## போரை முடிவுறுத்துவாரா புட்டின்?

**உக்ரைன் போரில் ஒரு திருப்பமாக ரஷ்யாவில் உள்ள தனியார் இராணுவ மற்றும் கூலிப்படை குழுவின் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஜின் தலைமையில் நடைபெற்ற ஓர் ஆயுதமேந்திய கிளர்ச்சி, அதன் தலைவருக்கும் ரஷ்ய அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விளைவாக குறுகிய காலத்தில் முடிவுக்கு வந்தது.**

**ரஷ்யாவின் வாக்னர் தனியார் இராணுவ நிறுவனத்தின் தலைவரான யெவ்ஜெனி பிரிகோஜினின் குறுகிய கால கலகம், அவருக்கும் ரஷ்யாவின் உயர்மட்டப் பாதுகாப்புத் தலைமைக்கும் இடையில் கட்டுப்படுத்த முடியாத வகையில் வளர்ந்து வரும் மோதலை அம்பலப்படுத்தியதோடு, நாட்டின் சிக்கலான அதிகார இயங்கியலில் பலவீனமாகி வரும் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் நிலையையும் எடுத்துக் காட்டியிருக்கிறது.**

**உள்நாட்டில் எதிர்ப்புப் போக்கை அனுமதிக்காமல், வெளியுறவுக் கொள்கை நலன்களை பலவந்தமாக விரிவுபடுத்தி இருபதாண்டுகளுக்கும் மேலாக, இரும்புக்கரம் கொண்டு ஆட்சிசெய்து வருகிறார் புட்டின். ஆனால், தெற்கு நகரமான ரோஸ்டோவ்-ஒன்-டானில் ஒரு முக்கியமான இராணுவத் தலைமையகத்தைக் கைப்பற்றி, மொஸ்கோவை நோக்கி 'நீதியின் பேரணியை' தொடங்கிய பிரிகோஜின், புட்டினுக்கு மிக முக்கியமான அரசியல் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு சவாலை முன்வைத்தார்.**

**அந்த கிளர்ச்சியை 'துரோகம்' என்று சொன்ன புட்டின், அதை நசுக்குமாறு தனது பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிட்டார். ஆனால், ஆபிரிக்காவில் தீவிரமான செல்வாக்கைக் கொண்ட வாக்னர், உக்ரைன் போரிலும் ஆதாயங்களை பெற்ற நிலையில் பல வருடங்களாகவே ஓர் இணை பாதுகாப்பு கட்டமைப்பாக வளர்ந்திருக்கிறது. அதனால், கிளர்ச்சியை நசுக்குவதற்குப் பதிலாக பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகாஷென்கோவை பிரிகோஜினுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள புட்டின் அனுமதித்தார்.**

**ரஷ்யாவின் உயர் இராணுவ தலைமை பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று கோரியிருந்த பிரிகோஜன் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷொய்குவையும் தலைமை தளபதியையும் 'வயதான கோமாளிகள்' என்று அழைத்த நிலையில், ஒப்பந்தத்தின்படி தனது படைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு கடந்த சனிக்கிழமை பெலாரஸில் தஞ்சமடைந்தார்.**

**எப்படியோ ஒரு முழுமையான உள்நாடுப் போரை புட்டின் இப்போது தவிர்த்திருக்கலாம். ஆனால், தனது பாதுகாப்பு வட்டத்தில் நிலவிய ஒரு மோதல், அவமானகரமான பொது நெருக்கடியாக தீவிரமடைந்ததைத் தடுக்க அவர் ஏன் தவறிவிட்டார் என்கிற கேள்வியிலிருந்து அவர் தப்பிக்க முடியாது. பாதுகாப்பு அமைச்சருக்கும் வாக்னருக்கும் இடையிலான போட்டி ஒன்றும் இரகசியமானதல்ல. கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்தே பாதுகாப்பு அமைச்சரை பிரிகோஜின் தாக்கிப்பேசி வருகிறார். அமைச்சரவைக்கு எதிராக ஊழல் மற்றும் திறமையின்மை குற்றச்சாட்டுகளையும் அவர் முன்வைத்தார். அப்போது புட்டின் அது குறித்து ஒன்றும் செய்யவில்லை.**

**உக்ரைன் மீதான போரில் பக்முத்தில் வாக்னருக்கு ஏற்பட்ட அதிகப்படியான இழப்புகளுக்கு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சுதான் காரணம் என்றும் பிரிகோஜின் குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால், பக்முத்தில் வாக்னரின் வெற்றி, ரஷ்ய போர்க்களத்தில் பல மாதங்களில் கிடைத்த முதல் பெரிய வெற்றி. அதன் காரணமாக ஷொய்கு - பிரிகோஜின் மோதல் தீவிரமடைந்ததைப் போலத் தோன்றியது. பக்முத்தை வாக்னர் கைப்பற்றிய சில நாட்களுக்குப் பிறகு, ஷொய்கு அனைத்து துணை இராணுவப் படைகளையும் பாதுகாப்பு அமைச்சகத்துடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுமாறு கேட்டுக்கொண்டார். வாக்னரை அழிக்கும் ஒரு முயற்சியாக இதனை பிரிகோஜின் பார்த்தார். அவரது கிளர்ச்சிக்கு இதுவே தூண்டுதல்.**

**பெப்ரவரி 2022இல் உக்ரைன் போர் தொடங்குவதற்கு முன்பு, புட்டின் மிக வலிமையான ஒரு தலைவராக இருந்தார். மிகப்பெரிய, ஒருங்கிணைந்த நிர்வாகத்தை வழிநடத்தி உலகளவில் ரஷ்யாவின் செல்வாக்கை விரிவுபடுத்தியிருந்தார். பதினாறு மாதங்களுக்குப் பிறகு, உக்ரைனில் மட்டுப்படுத்தப்பட்ட பிராந்திய வெற்றிகளுடன் புட்டினுக்கு உள்நாட்டிலும் சவால்கள் அதிகரித்து வருகின்றன. அவர் தனது தளபதிகளுக்கும் போர்த் தலைவர்களுக்குமிடையில் ஒரு தற்காலிக அமைதியைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், கிளர்ச்சிக்குப் பின்னான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன. ஸ்திரத்தன்மை வேண்டுமென்றால், புட்டின் முதலில் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து தனது நாட்டின் பிரச்சினைகளை சரி செய்யவேண்டும்.**

## இன்றைய நாளில்...

**✱ 1915 – சிங்கள - முஸ்லிம் கலவரம் : கண்டியில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் ஆரம்பித்து ஜூன் 5இல் முடிவுக்கு வந்தது.**

**✱ 1958 – இலங்கை இனக்கலவரம் : கல்கிஸையில் தமிழருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட ஆயிரத்திற்கும் அதிகமானோர் இராணுவத்தினரால் கலைக்கப்பட்டனர். தமிழர் ஒருவர் உயிருடன் எரிக்கப்பட்டார்.**

**✱ 2007 – கொழும்பு, இரத்மலானையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டனர், 7 இராணுவத்தினர் உட்பட பலர் காயமடைந்தனர்.**



# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவின் வகிபாகம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருக்கமுடியும்!

ஜெனீவாவில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இலங்கையில் நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான சர்வதேச சமூகத்தின் தேடல் தொடர்கின்றது என்பதற்கு போதுமான சான்றாகும்.

"மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களில் பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய அம்சங்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருப்பது கவலைக்குரியதாக இருக்கின்ற போதிலும், அது களத்திலுள்ள எமது அமைப்புகளுடன் தொடர்ச்சியாக ஊடாட்டங்களைச் செய்திருக்கிறது. கடந்த தசாப்தத்தில் குறிப்பிட்ட ஆணையுடன் செயற்படும் ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் (Mandate holders) பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தை நான் ஊக்கப்படுத்துகிறேன்'' என்று வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் ரேக் குறிப்பிட்டிருக்கிறார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதால் ஏற்பட்ட மாற்றம் இலங்கை அரசாங்கத்திடம் சர்வதேச சமூகம் முன்வைத்த கோரிக்கைகளிலும் எதிர்பார்ப்புகளிலும் எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை.

ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு சமாந்தரமாக இலங்கையில் மனிதப்புதைகுழிகள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பில் ஐந்து முன்னணி சிவில் சமூக அமைப்புகளினால் மேற்கொள்ளப்பட்ட கடந்த கால விசாரணைகளின் அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

"மூன்று தசாப்தங்களுக்கும் இருபது மனிதப்புதைகுழிகள் தோண்டும் முயற்சிகளுக்கும் பிறகு சில சடலங்களே இதுவரையில் அடையாளம் காணப்பட்டு குடும்பங்களிடம் திருப்பிக் கையளிக்கப்பட்டன. நாடு பூராவும் ஆழமற்ற புதைகுழிகளில் ஆயிரக்கணக்கான சடலங்கள் கிடக்கின்றன என்பது எம் எல்லோருக்கும் தெரியும். அதனால் விசாரணைகளில் போதிய முன்னேற்றம் ஏற்படாத இந்த நிலைமையை துரதிர்ஷ்டம் என்று எம்மால் வர்ணிக்கமுடியாது. அரசியல் துணிவாற்றலோ விருப்போ இல்லை என்பதே தெளிவானது'' என்று காணாமல் போனோர் குடும்பங்கள் என்ற அமைப்பின் ஸ்தாபகரான சிவில் சமூக செயற்பாட்டாளர் பிரிட்டோ பெர்னாண்டோ கூறினார்.

அந்த அறிக்கை வெளியிடப்பட்ட நிகழ்வுக்கு ஊடகங்கள் கொடுத்த பெரும் முக்கியத்துவம் போரின் போதும் ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) கிளர்ச்சிகளின்போதும் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்கள் அனுபவித்த வேதனையையும் அவலத்தையும் பிரதிபலிக்கிறது.

சர்ச்சைக்குரிய மனித உரிமை மீறல்கள் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் ஊடகங்கள் காட்டுகின்ற ஆர்வம் போரின் முடிவுக்கு பின்னரான காலகட்டத்தின் மிகவும் நேர்மறையான அம்சங்களில் ஒன்றாகும்.

'த ஐலண்ட்' பத்திரிகை காணாமல் போனோர் தொடர்பிலான அறிக்கை வெளியீட்டு நிகழ்வு பற்றிய செய்திக்கு முன்பக்க முக்கியத்துவம் கொடுத்திருப்பது மாத்திரமல்ல, இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சுமத்தப்பட்ட இனப்படுகொலை குற்றச்சாட்டு தொடர்பில் கனடா அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கொழும்பில் உள்ள அந்நாட்டு தூதரகத்திடம் விளக்கத்தையும் கேட்டிருந்தது.

மே 18ஆம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவு தினமாக அனுஷ்டிப்பதற்கான தீர்மானத்தை 2022 மே 18 கனடா பாராளுமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியது என்று அந்நாட்டு பிரதமர் ஜஸ்ரின் ரூடோ குறிப்பிட்டிருந்தார்.

முதலாவது தமிழர் இனப்படுகொலை நினைவு தினத்தை முன்னிட்டு பிரதமர் தெரிவித்த கூற்று கனடாவின் நிலைப்பாட்டையும் இலங்கை மோதலில் பாதிக்கப்பட்டவர்கள், உயிர்தப்பி வாழ்பவர்கள் மற்றும் தொடர்ந்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவரும் சகல இலங்கையர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுப்பதை கனடா நிறுத்தப்போவதில்லை என்பதையும் பிரதிபலிக்கிறது என்று அந்நாட்டு உயர்ஸ்தானிகரகம் வலியுறுத்திக் கூறியது.

### மிகவும் கடினமான பணி

அரசியலமைப்பு வரையறைக்குள் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் நோக்கிய நீண்டகால அடிப்படையிலான நடவடிக்கைகள் மீது தொடர்ந்து கவனத்தை செலுத்துவதே தனது நிலைப்பாடாக இருந்துவருவதாக கூறும் அரசாங்கம் தேசிய இறைமையை பாதிக்கக்கூடிய சர்வதேச பொறிமுறைகளை எதிர்க்கிறது.

போர் இராணுவ ரீதியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 2009ஆம் ஆண்டிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான முதல் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து இலங்கை அரசாங்கங்கள் தீர்மானங்களை தோற்கடிப்பதற்கே முயற்சிகளை முன்னெடுத்தன. ஜெனீவாவில் தூதுக்குழுவுக்கு அன்றைய தூதுவர் கலாநிதி தயான் ஜெயதிலக தலைமை தாங்கியபோதே முதற்தடவையாக தீர்மானத்தை தோற்கடிப்பதில் இலங்கை வெற்றி கண்டது.

ஆனால், வழங்கிய உறுதிமொழிகளை (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகள் உட்பட) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதை அடுத்தே தொடர்ச்சியாக மேலும் பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு இலங்கைக்கு எதிரான அலை திரும்பியது.

2015ஆம் ஆண்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் புதிய தீர்மானம் ஒன்றுக்கு இணை அனுசரணை வழங்குவதற்கு இணங்கியபோது மாத்திரமே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் விவகாரத்தில் சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்பதில் இலங்கை ஆர்வம் காட்டியது. பாதுகாப்பு படைகளின் அதிகாரிகளை நுணுகி ஆராய்வது, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பாதுகாப்பு படைகளில் இருந்த நீக்குவது, பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை ஆராய சர்வதேச பங்கேற்புடன் கூடிய விசேட நீதிமன்றங்களை அமைப்பது என்று பல்வேறு விதப்புரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

அந்த காலப்பகுதியில் காணிகளை திருப்பிக்கொடுத்தல், குடிமக்கள் வாழ்வில் இராணுவத்தின் ஈடுபாட்டைக் குறைத்தல் போன்ற மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கையாள சில முயற்சிகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், அரசாங்கம் அமைத்த காணாமல் போனோர் விவகார அலுவலகம் போன்ற நிறுவனங்கள் அவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை காரணமாக விரைவாகவே நம்பகத்தன்மையை இழந்தன.

கடந்த காலத்தை விசாரணை செய்வதற்கு அரசாங்க முறைமைக்குள் இருந்தும் பொதுவில் பரந்தளவு சமூகத்திடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பியது. அவை போரை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் பேணிப்பாதுகாப்பதற்கு அவசியமான சேவையை பாதுகாப்பு படைகள் செய்ததாக நோக்கின. தொடர்ந்து நோக்குகின்றன. ஸ்பெயின் நாட்டின் சர்வாதிகார யுகத்தின் காயங்களை குணப்படுத்தும் செயன்முறையின் ஒரு அங்கமாக பாஸ்க் பிராந்தியத்தின் ஒர்டுனா நகரில் ஆழமற்ற புதைகுழிகளில் இருந்து 53 சடலங்களை ஸ்பெயின் தொண்டர்களும் தடயவியல் தொல்லியலாளர்களும் தோண்டியெடுத்ததாக சில மாதங்களுக்கு முன்னர் சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. 1936 -1939 ஸ்பெயின் உள்நாட்டுப் போரின்போது ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டார்கள். ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் போனதாகவும் வரலாற்றாசிரியர்கள் மதிப்படுகிறார்கள். இவர்களில் பலர் அடையாளமிடப்படாத குழிகளில் புதைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

சர்வாதிகார ஆட்சியின் குற்றங்கள் பற்றிய உண்மையைக் கண்டறியும் பரந்தளவிலான முயற்சியின் ஓர் அங்கமாக அந்த புதைகுழிகளில் இருந்து சடலங்களை தோண்டியெடுப்பதற்கு 80 வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு பின்னர் 2020ஆம் ஆண்டிலேயே நிதியை வழங்குவதற்கான சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்தது. முன்னாள் ஜனாதிபதி பிரான்சிஸ்கோ பிராங்கோவின் மரணத்துக்கு பிறகு நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட காயங்கள் குணப்படுத்தப் படவில்லை. பாஸ்க் பிரிவினைவாதத்துக்கு வழிவகுத்த உள்நாட்டுப்போரின் காயங்கள் மற்றும் பிளவுகளை இன்றுவரை ஸ்பெயின் கொண்டிருக்கிறது.

### மந்திர மருந்து

நீதியும் பொறுப்புக்கூறலுமே எந்தவொரு சமுதாயத்தையும் பிணைக்கின்ற காரணிகளாகும். தாங்கள் அரசாங்கத்தினால் நேர்மையாக நடத்தப்படுவதாகவும் அவ்வாறு நேர்மையாக நடத்தப்படாவிட்டால் நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் மக்கள் உணரக்கூடியதாக இருக்கவேண்டும்.

சர்வதேச சமூகம் உயர்ந்த மட்டங்களில் அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் அடைந்த மேற்குலக நாடுகளின் தலைமையில் இருக்கிறது. மேற்குலக நாடுகள் அவற்றின் நலன்களுக்காக செயற்படுகின்ற சமுதாயங்களை உருவாக்கியிருக்கின்றன. இலங்கை அபிவிருத்தி, நீதி மற்றும் சுபீட்சத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அந்த நாடுகள் விதிக்கின்ற வழிகாட்டல்களை நாம் பின்பற்றவேண்டியிருக்கிறது.

மனித உரிமைகளுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் நடா அல் - நஷீவ் ஜூன் 21 அன்று தனது வாய்மூல அறிக்கையில், "உண்மை, பரிகாரம், நினைவுகூரல், பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களை இணைக்கக்கூடியதும் வெற்றிகரமானதும் நிலைபேறானதுமான நிலைமாறுகால நீதிச் செயன்முறையொன்றுக்கான சூழலை சாத்தியமாக்கக்கூடியதுமான ஒரு கட்டுறுதியான திட்டமே இன்று தேவைப்படுகிறது'' என்று கூறியிருக்கிறார்.

சர்வதேச சமூகத்திடமிருந்து வருகின்ற இந்த நெருக்குதல்களுக்கு அரசாங்கத்தின் பதில் காணாமல் போனோர் விவகார அலுவலகம் போன்ற ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பொறிமுறைகளுக்கு புத்துயிரளித்து வலுப்படுத்துவதாக இருக்கவேண்டும். காணாமல் போனோர் விவகார அலுவலகம் புதிய தலைமைத்துவத்தின் கீழ் அதன் ஆற்றலை சர்வதேச சமூகத்தினதும் சிவில் சமூக அமைப்புக்களினதும் ஆதரவுடன் கட்டியமுப்புகின்றது. அதேவேளை காணாமல் போனோரினதும் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களினதும் குடும்பங்களுக்கு நிதி மற்றும் இழப்பீடுகளை வழங்குவதில் இழப்பீட்டு அலுவலகத்தின் வகிபாகத்தை அதிகரிக்கும் முயற்சிகளையும் முன்னெடுக்கவேண்டும்.

ஆனால், அரசாங்கத்திடம் இருக்கும் பிரதான சாதனம் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்றே தோன்றுகிறது. இந்த ஆணைக்குழு தொடர்பான வரைவு அடுத்த மாதம் இராஜதந்திர சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளப்படவிருக்கிறது. அந்த வரைவு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதும் 2023 டிசம்பர் மட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

உண்மை மற்றம் நல்லிணக்க ஆணைக்குழு பொறுப்புக்கூறல் பிரச்சினைக்கு தீர்வைத் தரப்போவதில்லை என்பது வரைவை பார்வையிட்ட தமிழ்த் தலைவர்களின் அபிப்பிராயமாக இருககிறது. குற்றங்களைச் செய்தவர்களை பொறுப்புக்கூற வைப்பதாக வரைவு இல்லை. அரசாங்கத்துக்கு தலைமை தாங்குகிறவர்கள் கடந்தகால கிளர்ச்சிகளை ஒடுக்குவதில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் முக்கிய பங்கு வகித்தவர்களாக இருப்பதால் இந்த நேரத்தில் அந்த மட்டத்தில் பொறுப்புக்கூறலை எதிர்பார்க்கமுடியாது.

அரசாங்க தலைவர்கள் தங்கள் மீது தாங்களே குற்றச்சாட்டுகளை சுமத்துவார்கள் அல்லது அத்தகைய குற்றஞ்சுமத்தலுக்கும் வழக்கு தொடுத்தலுக்கும் வழிவகுப்பார்கள் என்று எதிர்பார்ப்பது பொருத்தமானதல்ல. பாதுகாப்பு படைகளை இலக்கு வைக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கையும் பெருமளவுக்கு கடந்த 80 வருடங்களுக்கும் மேலாக ஸ்பெயினில் நிலைத்திருப்பதைப் போன்ற பிளவு, சமூகத்தில் ஏற்படுவதற்கும் அரசாங்க தலைமைத்துவத்துக்கு எதிராக மக்கள் வாக்களிக்கவும் வழிவகுக்கும்.

2019ஆம் ஆண்டில் உண்மையில் நடந்தது அதுவே. இணை அனுசரணையுடனான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிராகரிக்கவேண்டும் என்பதை தனது நிலைப்பாடாக அறிவித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்களப் பெரும்பான்மையின வாக்குகளினால் அதிகாரத்துக்கு வந்தார்.

தற்போதைய தருணத்தில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றின் வகிபாகத்தை மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது. காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன என்ற உண்மையை தற்போதைக்கு உறுதிப்படுத்திக் கொண்டு, சர்வதேச கவனத்தை பெற்றுவரும் இனப்படுகொலை குற்ச்சாட்டை காலப்போக்கில் கையாளலாம்.

கடந்த கால தவறுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யுமுகமாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கடந்த காலத்தைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டிய பெரிய தேவை இருக்கிறது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பிரச்சினைகளுக்கு சுலபமாகவும் துரிதமாகவும் தீர்வைத் தரவல்ல ஒரு மந்திர மருந்தாக இருக்கப்போவதில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு பதில்களைத் தரப்போவதுமில்லை. அந்த தீர்மானங்களை மாற்றத்துக்கான ஒரு செயன்முறையில் வேறு பல வழிகளில் கையாளவேண்டியது அவசியமாகும். அந்த செயன்முறைகளை முன்னெடுக்கும்போது நேர்மை வெளிக்காட்டப்பட வேண்டும்.



கலாநிதி ஜெகான் பெரேரா






மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி பழைய மாணவியர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் அதிபர் ஏ.எல்.ஏ.ரஹ்மான் தலைமையில் கல்லூரி வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு அதிதிகளால் பரிசில்களும் வழங்கப்பட்டன.

**படங்கள்:** *அரநாயக்க செய்தியாளர்*

# 'இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாளத் திட்டம்'

## தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழுவில் தெரிவிப்பு



இந்திய - இலங்கை இணைந்த திட்டமான 'இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாளத் திட்டம்' (SL-UDI) நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அண்மையில் (21) பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. அதன்போதே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கமைய, இந்த அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நபர்களின் சுய விபரங்கள், உயிரியவியல் (biometrics) தகவல்களை (முகம், கருவிழி மற்றும் கைரேகை) பெற்று மத்திய அமைப்புக்குள் உள்வாங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், பிரஜைகளின் பிறப்புச் சான்றிதழ் முதல் அனைத்து ஆவணங்களையும் ஒரு தனித்துவமான இலக்கத்தின் கீழ் தகவல்களை டிஜிட்டல் மயப்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பான பிரேரணை உள்வாங்கப்பட்டு தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் செயற்பாட்டுப் பொறிமுறையில் காணப்படும் பலவீனம் காரணமாக அது தடைப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

தாமதங்களையும் பின்னடைவையும் ஏற்படுத்தும் கடந்த கால ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, ஒரு தொகுதியிலிருந்து புதிதாகத் தொடங்கி முன்னோக்கிச் செல்லும் வகையில் செயற்படுமாறு குழு அறிவுறுத்தியது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், சமன்பிரிய ஹேரத், வீரசுமன வீரசிங்க மற்றும் குணதிலக ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 'கொவி மிதுர சேவா' செயலி அறிமுகம்

தேயிலை ஆராய்ச்சி தினத்தில் தேயிலை உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு உதவும் வகையில் 'கொவி மிதுர சேவா' (உழவர் நட்பு சேவை) எனும் பெயரிலான செயலியினை அறிமுகப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் "Ceylon Tea" எனும் இப்பெயரினை உலக அளவில் கொண்டு செல்ல அனைத்துவிதமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் சி.எஸ்.லொகுஹெட்டி தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் (26) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், தேயிலை உற்பத்தியின் உயர் அதிகாரி முதல் கீழ் மட்டத் தொழிலாளிவரை ஆய்வுத்துறை தொடர்பாக அனைத்து விடயங்களையும் தெரிந்துகொள்ள 29, 30ஆம் திகதிகளிலான தேயிலை ஆராய்ச்சி தினத்தினையொட்டி கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் இலங்கை கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த ஆகியோரின் ஒத்துழைப்புடன் " Open Day" (திறந்த தினமாக) அத் தினங்களைக் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நவீன சந்தை வாய்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில் உலகளவில் அதிக இலாபமீட்டும் துறையாக தேயிலையை எவ்விதம் முன்னேற்றலாம் என்பது தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நவீன சந்தை வாய்ப்புகளை சிறு உற்பத்தியாளர்கள் தொடக்கம் பாரியளவு உற்பத்தியாளர்கள் வரையில் ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிப்பதாகவும் இச் சந்திப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுவரை 02 மில்லியன் மக்கள் மட்டுமே தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாகவும் இவ் உற்பத்தியாளர்களின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அத்துடன் உலக சந்தையில் இலங்கை தேயிலைக்கான கேள்வியை அதிகரிக்கும் வகையில் பல்வேறு வகைப்பட்ட தேயிலைகளை உற்பத்தி செய்யும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்ற தகவல்களும் இவ் ஊடக சந்திப்பில் பகிரப்பட்டன.



அராலி மேற்கு நீளத்திக்காடு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வேட்டைத்திருவிழா நேற்று இடம்பெற்றது. பூஜை வழிபாடுகளை ஆலய பிரதம குரு துஷ்யந்த குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தினர்.

# பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் 200 ஆண்டு பூர்த்தி விழா



யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையின் 200 ஆண்டு பூர்த்தி விழா நேற்று (27)இடம்பெற்றது.

இதன்போது பிரதம, சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதல் நிகழ்வாக தேசிய கொடி, பாடசாலை கொடி என்பவற்றை முறையே யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராசா, பாடசாலை அதிபர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சைவ கிறிஸ்தவ இறை வணக்கங்கள் இடம்பெற்றன. தொடர்ந்து வரவேற்பு மற்றும் தலைமையுரையை கல்லூரி முதல்வர் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புரையை நிகழ்வின் பிரதம விருந்தினரும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருமான பேராசிரியர் சிறிசற்குணராசா நிகழ்த்தியதை தொடர்ந்து நிகழ்வுகளை சம்பிரதாயபூர்வமாக துணைவேந்தர் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மாணவிகள், பழைய மாணவிகள், அதிபர், ஆசிரியர்களின் துவிச்சக்கர வண்டி பவனி, வாகன பவனி, நடை பவனி என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வடமராட்சி வலய கல்விப் பணிமனை அதிகாரிகள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், புலம்பெயர்ந்த மற்றும் உள்ளூர் பழைய மாணவர்கள், பெற்றோர், மாணவர்கள், நலன் விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# சைவ சமயப் பாடப் பரீட்சையில் ஆண்டிமுனை மாணவி சித்தி



உடப்பு செய்தியாளர்

கொழும்பு விவேகானந்த சபையின் 120ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கடந்த 2022.12.04ஆம் திகதி நடத்தப்பட்ட சைவ சமயப் பாடப் பரீட்சையில் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய மாணவி நர்த்தனகேசன் பவதாரனிக்கா அகில இலங்கை ரீதியில் உயர் சித்தி பெற்றுள்ளார். இவருக்கு சான்றிதழ் மற்றும் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்றது. சிரேஷ்ட சட்டத்தரணி விவேகானந்த சபைத் தலைவர் கலாநிதி எம்.ஆர்.ராஜ்மோகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிரேஷ்ட சட்டத்தரணி கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய அறங்காவலர் விவேகானந்த சபை காப்பாளர் டி.எம்.சுவாமிநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பிரத்தியேக வகுப்புகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும்

## மாவட்ட செயலாளருக்கு யாழ். வணிகர் கழகம் கடிதம்

வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும். தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையானது தற்போதைய காலகட்டத்தில் பொருத்தமற்றதாக அமையு மென நாம் கருதுகிறோம் என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களால் நடத்தப்படும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை தரம் 9க்கு உட்பட்ட மாணவர்களுக்கு ஜூலை 01ஆம் திகதிமுதல் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நிறுத்துவதற்கு யாழ். மாவட்ட செயலகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக யாழ். வணிகர் கழகம், மாவட்ட செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வெள்ளி, ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையானது தற்போதைய காலகட்டத்தில் பொருத்தமற்றதாக அமையுமென நாம் கருதுகிறோம்.

அதாவது கடந்த போர் காரணமாக தமிழ் மக்களின் கல்வித்தரம் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதாவது, இலங்கையில் மாகாண அடிப்படையில் எமது மாகாணம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 8 அல்லது 9ஆவது நிலையில் உள்ளது. அதனை ஈடுசெய்ய வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. கொரோனா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட முடக்கநிலை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பாடசாலைகளில் பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படவில்லை.

அத்துடன், வழமையாக நடைபெறும் பரீட்சைகளும் பின் தள்ளப்பட்டுச் செல்கின்றன. மேலும் கூடுதலாக தனியார் கல்வி நிலையங்களில் இப்பாடத்திட்டங்கள் முடிந்தளவு கவனத்தில் எடுத்து கற்பிக்கப்படுகின்றன.

தொழில் நிமித்தம் வேலைக்குச் செல்லும் பெற்றோர் பிள்ளைகளின் கல்விக்காக சனி, ஞாயிறு தினங்களையே தனியார் கல்வி நிலையங்களுக்கு கூட்டிச்செல்வது பொருத்தமாக அமையுமென கருதுகின்றனர்.

மேலும் இந்த தடைவிதிக்கப்பட்ட காலங்களில் இடைவிலகிய மாணவர்களுடன் இவர்களும் இணைந்து பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அத்துடன், சமூக சீர்கேடுகளில் இணையும் வாய்ப்புகள் அதிகம் ஏற்படலாம். ஏழை, நடுத்தர மாணவர்கள் பயன்பெறும் தனியார் பயிற்சிக்கல்வி வெள்ளி, ஞாயிறு தினங்களில் தடைசெய்யப்பட்டால் அவர்களுடைய கல்வி பாதிக்கப்படும். அதேவேளை, வசதி படைத்த மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்று பயனடைவர்.

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களே தனியார் கல்வி நிலையங்களிலும் வகுப்புகளை நடத்துவதால் அவர்களுக்கு விடுமுறை நாட்கள் வசதியாக அமையும்.

இந்தத் தடை அமுலுக்கு வருமாக இருந்தால் கல்விச் செயற்பாடுகளில் மேலும் பின்னடைவு ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன. அத்துடன், எமது செயற்பாடுகள் பின்நோக்கிச் செல்வதற்கு நாமே வாய்ப்பை ஏற்படுத்தியவர்களாக விளங்குவோம்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கை அரச அமைச்சரவையில் அப்போதிருந்த கல்வியமைச்சரால் வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகள் தடைசெய்ய வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது அமைச்சரவையில் பாரிய எதிர்ப்பு கிளம்பியதையடுத்து இந்த விடயம் கைவிடப்பட்டதாக நாம் அறிகிறோம். மேலும், இலங்கையில் எந்த மாகாணத்திலும் இப்படியான நடைமுறைகள் இல்லாதபோது நாம் மட்டும் இதை ஏற்படுத்தி எமது மாகாணக் கல்விப் பின்னடைவுக்கு வழிவகுப்பதாக அமையும் என்று நாம் கருதுகிறோம்.

ஆகவே, மேற்குறிப்பிட்ட விடயங்களை கவனத்திலெடுத்து மேற்குறித்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.06.26
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5157 | ரூ. 22,019,108.00 | V | 5 0 8 9 9 3 |
| கொவிசெத | 3399 | ரூ. 65,899,328.80 | V | 13 40 46 78 |
| ஜாதிக சம்பத | 1612 | ரூ. 12,946,048.32 | மகரம் | 5 7 7 5 8 4 |
| தன நிதானய | 1187 | ரூ. 97,165,367.20 | J | 05 15 18 36 |
| ராசி சுப பலன் Handahana | 466 | ரூ. 2,534,173.00 | துலாம் (விசேட இலக்கினம்: துலாம்) | 19 27 45 57 |
| Mega POWER | 1505 | ரூ. 332,508,250.00 (அடுத்த மெகா சுப்பர் பரிசு) | U (சுப்பர் இலக்கம் 09) | 11 25 53 70 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்களுக்கு நியாயமான தீர்வு வழங்க நடவடிக்கை

யாழ். நிருபர்

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்களிடம் அதிகூடிய இடவாடகைக் கட்டணம் அறவிடப்படுவதாக வர்த்தகர்களாலும், சேவைச்சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கத்தினராலும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன். கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் இராஜபாலன் புவனேஸ்வரன், உபதலைவர் கறுப்பையா ஜெயக்குமார், உறுப்பினர் அருளானந்தம் யேசுராஜன் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் (26) வடமாகாண ஆளுநரை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.



ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது புதிய மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையிலான கட்டண அறவீட்டினால் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைச் சுட்டிக்காட்டி அதனைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய திணைக்களங்களோடு கலந்துரையாடி கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்கள் பாதிக்கப்படாத வகையிலான தீர்வைப் பெற்றுத்தருவதாக வடமாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சார்ள்ஸ் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குருதிக் கொடையாளிகளுக்கு யாழில் கௌரவிப்பு



யாழ். நிருபர்

குருதிக் கொடையாளிகளையும் குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்துபவர்களையும் கௌரவிக்கும் விசேட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

100 குருதிக் கொடையாளர்களுக்கும் 50 குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்துபவர்களுக்கும் இதன்போது கௌரவமளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிராந்திய இரத்த வங்கி ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வு யாழ்ப்பாணம் தாதியியல் கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை (27) காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அ.சிவபால சுந்தரன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலை அதிகாரிகள், இரத்த வங்கி உத்தியோகத்தர்கள், தேசிய குருதிமாற்று பிரயோக சேவையினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு குருதிக் கொடையாளருக்கு கௌரவம் வழங்கினர்.

உலக குருதிக் கொடையாளர் தினம் வருடாந்தம் ஜூன் 14ஆம் திகதி உலகளாவிய ரீதியில் அனைவராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

## யாழில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் கைது!

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம் – சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் காங்கேசன்துறை பிராந்திய மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அளவெட்டி பகுதியில் பாடசாலை அதிபரொருவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் நடத்திய விசாரணைகளில் அளவெட்டி பகுதியைச் சேர்ந்த 21 வயது மற்றும் 25 வயதான இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையடித்த இலத்திரனியல் பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைதான சந்தேக நபர்கள் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், தெல்லிப்பழை



பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் கைதான சந்தேக நபர்கள் சுன்னாகம் – தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாகக் கூறியுள்ள பொலிஸார், மேற்படி இரு பொலிஸ் பிரிவுகளிலும் அண்மைய நாட்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## மோட்டார் சைக்கிள் மோதி பாடசாலை மாணவன் படுகாயம்

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரி- சங்கத்தானைப் பகுதியில் நேற்றுமுன்தினம் (26) திங்கட்கிழமை மதியம் ஏ-9 வீதியை கடக்க முற்பட்ட 13 வயது மாணவனை மோட்டார்சைக்கிள் மோதியதில் மாணவன் தலையில் அடிபட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். காயமடைந்த மாணவனை அவ்விடத்தில் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் உடனடியாக வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்ததுடன் விபத்துக்குக் காரணமான இளைஞனை யும் கைதுசெய்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

விபத்துக்குள்ளான மீசாலை மேற்குப் பகுதியைச் சேர்ந்த 13 வயதான மாணவன் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தென்மராட்சியில் நலன்புரி உதவித்திட்டம் கிடைக்காத மக்கள் மேன்முறையீடு

சாவகச்சேரி நிருபர்



தென்மராட்சியில் அரசாங்கத்தின் நலன்புரி நன்மைகள் சபையின் உதவித்திட்டம் கிடைக்கத் தகுதி இருந்தும் திட்டத்துக்குள் உள்வாங்கப்படாத பொதுமக்கள் நேற்று (27) செவ்வாய்க்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தமது மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளைப் பதிவு செய்திருந்தனர்.

60 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி பிரதேசத்தில் உதவித்திட்டம் கிடைக்கத் தகுதியிருந்தும் உதவித்திட்டம் கிடைக்காத பலரும் தமது மேன்முறையீட்டுப் படிவங்களைப் பூர்த்திசெய்து சமர்ப்பித்ததுடன், தகுதி இல்லாது திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டிருப்போர் தொடர்பான ஆட்சேபனைகளையும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

குறித்த தினத்தில் தென்மராட்சியின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பிரதேச செயலகத்தை நாடி தமது மேன்முறையீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மகாவலியில் மீன்பிடித்த நபர் நீரில் மூழ்கி மரணம்!

கண்டி செய்தியாளர்

மகாவலிகங்கையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நபரொருவர் நீரில் மூழ்கி நேற்று முன்தினம் (26) மரணமடைந்துள்ளார்.

மஹியங்கனை பொலிஸ் பிரிவில் நிதங்கல-அக்கற அசூவ பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நபர் வலை வீசி மீன் பிடிப்பதற்கு முயற்சித்த போதே நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து அயலவர்களால் 119 அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கிராம மக்களுடன் இணைந்து தேடுதலை மேற்கொண்ட நிலையில், குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபர் தெய்யத்தகண்டிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சல்பிடிகம, தனேவெல பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## தொண்டையில் உணவு சிக்கி குழந்தை உயிரிழப்பு

எஸ்.கணேசன்

பொகவந்தலாவ பகுதியில் 26 வயதுடைய தாய் ஒருவர் தனது ஒரு வயது மகளுக்கு உணவூட்டிக் கொண்டிருந்தபோது உணவு தொண்டையில் சிக்கி அந்தக் குழந்தை உயிரிழந்துள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், தாய்க்கு திடீரென ஏற்பட்ட வலிப்பு நோயால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பொகவந்தலாவை பிரிட்வெல் தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகன் அகல்யா என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாய் மதிய உணவு தயாரித்து குழந்தைக்கு ஊட்டிக் கொண்டிருக்கும்போது மேற்படி தாய்க்கு வலிப்பு நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் குழந்தையின் தொண்டையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த உணவு சிக்கி அவர் உயிரிழந்துள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த குழந்தையின் தாய் நீண்ட நாட்களாக வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.



**மஸ்கெலியா, நோட்டன், கினிகத்தேன – தியகல சந்தியில் பாரிய மண்மேடு சரிந்து விழுந்ததால் நேற்று போக்குவரத்து தடைப்பட்டது. அப்பகுதியில் கடும் மழை பெய்து வருவதால் சாரதிகளை அவதானமாக வாகனத்தைச் செலுத்துமாறு கோரி அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

**படப்பிடிப்பு:** செ. தி. பெருமாள், மனுர சுதத் செல்லஹேவா



**ஸ்ரீ லங்கா ராமஞ்ஞ மகா நிகாயே அனுநாயக்கவாக பதவியேற்ற வணக்கத்திற்குரிய வலேபொட குணசிறி நாஹிமியை கௌரவிக்கும் நிகழ்வு பலாங்கொடை வலேபொட வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மதகுருமார்கள் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.**

## வியாபார நிலையம் மீது தாக்குதல்

# இரத்தினபுரியில் நால்வருக்கு ஐந்து வருட சிறைத்தண்டனை

ஏ.ஏ.எம்.பாயிஸ்

வியாபார நிலையம் ஒன்றைத் தாக்கி 50 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட நஷ்டத்தை ஏற்படுத்திய இரத்தினபுரி பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் உட்பட நான்கு பேருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 5 வருட கடூழியச் சிறைத்தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

1997 ஆம் ஆண்டு இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நாலந்த எல்லாவல, குருவிட்ட நகரில் சுட்டுக்கொலை செய்யப்பட்டபோது இடம்பெற்ற அசம்பாவிதங்களில் இரத்தினபுரி பிரதேச சபையின் உப தலைவராகக் கடமையாற்றிய சுதத் திசாநாயக்க என்பவர் உட்பட நான்கு பேருக்கு 2006 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மேல்நீதிமன்றம் 5 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.

இத்தீர்ப்புக்கு எதிராக இரத்தினபுரி பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் உட்பட 4 சந்தேக நபர்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

எனினும், இரத்தினபுரி மேல்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை உறுதி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இவர்கள் நால்வருக்கும் 5 வருட கடூழிய சிறைத் தண்டனையை உறுதிப்படுத்திள்ளது.

## காதலி இறந்ததால் காதலன் தற்கொலை

பதுளை செய்தியாளர்

காதலி இறந்து சில நாட்களின் பின்னர் காதலன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பலாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடை, வெலிகேபொல பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பப் பிரச்சினை காரணமாக குறித்த இளைஞனின் காதலி கடந்த சில தினங்களுக்கு முன்னர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இதனால் மனமுடைந்து கடும் விரக்தியுடன் பொழுதைக் கழித்து வந்த இளைஞன் காதலியின்றி தன்னால் வாழ முடியாது எனக் கூறி தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த இளைஞன் இறப்பதற்கு முன்னர் தனது காதலியின் பிரிவு குறித்து தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றையும் பதிவேற்றியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.



**தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் பதுளை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினால் இனங்களுக்கிடையிலான நல்லுறவை மேம்படுத்தும் பயிற்சிச் செயலமர்வு பதுளை 'ரிவர் சைட்' விடுதியில் நேற்று (27) இடம்பெற்றபோது.........**

**படப்பிடிப்பு:** பதுளை செய்தியாளர்






கலாபூஷணம் பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் எழுதிய 'இலங்கையில் தயாரிக்கப்பட்ட தேசிய தமிழ் சினிமாவின் வரலாறு' எனும் நூல் வெளியீட்டு விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பும் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் நூலின் முதல் பிரதியை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார். இதன்போது சங்கவி நிறுவனத்தால் கலைஞர் முஹம்மது நசாருக்கு உலகத் தமிழன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கையின் ஈழத்துப் பாடகர் முத்தழகு, சங்கவி பிலிம்ஸ் ஸ்தாபகர் கலாநிதி துரைராசா சுரேஸ், தெ.செந்தில் வேலவர், திருமதி ஜுனைதீன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் முறைகேடிருந்தால் முறையிடவும்

## யாழ்ப்பாண மாவட்ட செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால் அதுதொடர்பாக எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதிவரை மேன்முறையீடு செய்யலாம். எனவே, இவ்விவகாரத்தில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை என யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

புதிய சமுர்த்தி பயனாளர்கள் தெரிவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து பொதுமக்கள் பல்வேறு இடங்களில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதுதொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் ஏதாவது முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் எதிர்வரும் ஜூன் மாதம் பத்தாம் திகதிவரை மேன்முறையீடுகளை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்க முடியும்,

அந்த மேன்முறையீடுகள் பரிசீலனை செய்யப்பட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, இது தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை என்றார்.

# பேருவளை அப்ரார் கல்வி அமைப்பின் விசேட கூட்டம்




பேருவளை நிருபர்

பேருவளை அப்ரார் கல்வி அமைப்பின் விசேட கூட்டம் பேருவளை மருதானை அஷ்ரப் வீதியில் உள்ள முன்னாள் சபாநாயகர் எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் இல்லத்தில் தலைவர் முஹம்மத் நிஸாம் தலைமையில் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பேருவளை முன்னாள் நகர பிதா மஸாஹிம் முஹம்மத் உட்பட உறுப்பினர்கள் பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அமைப்பின் செயலாளரும் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் பொருளாளருமான கலாநிதி அஸ்வர் அஸாகிம் (அல் அஸ்ஹரி) அமைப்பின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்தார்.

# ஹஜ் பெருநாளை முன்னிட்டு விசேட தொலைக்காட்சி நிகழ்ச்சி

ஹஜ் பெருநாளை முன்னிட்டு பிறை தொலைக்காட்சியில் சிங்களமொழியில் விசேட நிகழ்ச்சியொன்று நாளை 29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு இடமஇபெறவுள்ளது. இதன்போது கலந்துரையாடல், கசீதா மற்றும் இஸ்லாமியப் கீதங்கள் ஒளிபரப்பாகவுள்ளன .

மருதானை ஜும்ஆப் பள்ளிவாசல் செயலாளர் மர்ஷாத் பாரி, விரிவுரையாளர் எம். ஆர். ஆசாத், கொழும்பு அஹதிய்யா பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் ருஸைக் பாரூக் ஆகியோர் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# நலன்புரி உதவித்திட்டப் பதிவுகளில் முறைகேடு: நீர்கொழும்பில் போராட்டம்




அரசாங்கத்தின் நலன்புரி உதவித்திட்டப் பதிவுகளில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து நீர்கொழும்பு பிரதேச செயலகம் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இவ்வார்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் (26) இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவுத் திட்டத்துக்குள் உள்ளீர்க்கப்படாத பெண்கள் கலந்துகொண்டனர். அரசாங்கத்தின் நலன்புரி உதவித்திட்டத்துக்குள் பாதிக்கப்பட்டோரை உள்ளீர்க்குமாறு வலியுறுத்தியே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பிரதேச செயலகத்தின் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவருக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களுக்குமிடையில் கடும் வாக்குவாதமும் இடம்பெற்றது. இதனால் இப்பகுதியில் பதற்ற சூழ்நிலை நிலவியது.

இதுவரைகாலமும் தங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் பின்னர் புதிய தெரிவுப்பட்டியலில் தங்களின் பெயர் உள்ளீர்க்கப்படவில்லையெனவும் மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு தாங்கள் பொறுப்பல்ல எனவும் போராட்டக்காரர்கள் கடுந்தொனியில் தெரிவித்தனர்.

# இரத்த தானம் செய்ய அனைவரும் முன்வரவும்

## வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ் கோரிக்கை



வடபகுதியிலுள்ள மக்களிடம் இரத்த தானம் தொடர்பான விழிப்புணர்வு குறைவாக காணப்படுவதாக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்

யாழ்ப்பாண தாதிய பயிற்சிக் கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை (27) இடம்பெற்ற குருதி கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தானங்களிலே சிறந்த தானம் இரத்த தானம். உடற்பாகங்களை தானம் செய்வது, கண் தானம் செய்வது போன்ற பல்வேறு தானங்கள் தற்பொழுது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இரத்த தானம் வழங்குவதில் தற்பொழுது முழுமையாக நாங்கள் வளர்ச்சி பெறாவிட்டாலும் முன்னேற்றம் உள்ளதென்பது பலராலும் உணரப்பட்ட ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் அதை முன்வந்து தானம் செய்ய வேண்டும் என்ற அந்த விழிப்புணர்வு எங்களைப் பொறுத்தவரை குறைவாக இருப்பது எல்லா இடங்களிலும் சுட்டிக்காட்டப்படுகின்ற ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

இப்பொழுது பலர் அதற்கு தாங்களாக முன்வந்து இரத்த தானத்தை செய்துகொண்டிருக்கின்றார்கள். அவ்வாறானவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

# அக்கரைப்பற்றில் நூல் வெளியீடு

பன்னூலாசிரியர் மௌலவி ஏ. றபியுத்தீன் (ஜமாலி) எழுதிய 'உங்களைப்போல் யாருமில்லை யாறசூலே' எனும் நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் (30) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு, அக்கரைப்பற்று புதுப்பள்ளியடி, மர்ஜூன் கட்டடத் தொகுதியில் டாக்டர் எம்.ஏ.முபாரிஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

சட்டத்தரணி மர்ஹூம் மௌலானா, பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் முபிஸால் அபூபக்கர், சிரேஷ்ட ஊடகவியலாளர்களான இர்பான் மௌலானா, ஏ.ஜீ.எம். தௌபீக் ஆகியோர் நூலாய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

நூலாசிரியர் மௌலவி ஏ.றபியுத்தீன் (ஜமாலி) ஏற்புரையாற்றுவார்.

# துப்பாக்கிகளுடன் சந்தேக நபர் கைது

மொனராகலை பொலிஸார் கும்புக்கன பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (26) மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது தன்வசம் இரண்டு துப்பாக்கிகளை வைத்திருந்த ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை, கும்புக்கன மகுலாரா பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளவராவார். மொனராகலை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி பி.எஸ்.சர்மிந்த சஞ்சீவ தலைமையிலான குழுவினரே சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவை அமர்வு

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள நால்வருள் மூவரைத் திறமைப்புள்ளி ஒழுங்கில் தெரிவு செய்வதற்கான விசேட பேரவை அமர்வு எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 28ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், பல்கலைக் கழகப் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதனடிப்படையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மூவரும் கிழக்கு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவருமாக நான்குபேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தனர்.

எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் கண்காணிப்புடன் விண்ணப்பித்திருக்கும் மூவரினதும் கல்வித் தகைமை, அனுபவம், மற்றும் ஆளுமைத் திறன்களை மையப்படுத்தி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட 7 வகை புள்ளித்திட்டத்தின்படி பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் புள்ளிகளை யிடுவர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பெறும் மொத்தப் புள்ளிகளின்படி - திறமை அடிப் படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக்கழகச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவுசெய்து அவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி பிரகடனம் செய்வார்.

துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ. கண்ணதாசன், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் சிரேஷ்ட பேராசிரியருமான தி.வேல்நம்பி ஆகியோர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்தும், விலங்கியல்துறைப் பேராசிரியர் பி.வினோபாபா கிழக்கு பல்கலைக் கழகத்திலிருந்தும் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதி மைத்ரி யாழ். விஜயம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன யாழ். மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின்பேரில் நாளை 29ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள மைத்ரிபால சிறிசேன மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அங்கு இடம்பெறும் பல்வேறு பொது நிகழ்வுகளிலும் சந்திப்புகளிலும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கொழும்பு, புதுச்செட்டித்தெரு சீரடி சாய்பாபா ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையிலான 25 பேரடங்கிய பக்தர்கள் குழுவினர் கடந்த 22ஆம் திகதி வட இந்திய மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள சீரடி சாயி சந்நிதியான் ஆலயத்துக்கு யாத்திரை மேற்கொண்டனர். இதன்போது கொழும்பு ஆலயத்தில் வீற்றிருக்கும் சீரடி பாபாவுக்கு முதல் முறையாக தங்கக் கிரீடம் அணிவிக்கும் முயற்சிக்கு மகாராஷ்டிர சாயி சந்நிதானத்தின் சார்பில் தலைமை அதிகாரி கலாநிதி அகிலாஷ் கிஸ்வே தங்க நாணயம் ஒன்றை உதயநாயகனிடம் கையளித்தார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (27.06.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.1436 | 214.0464 |
| கனேடியன் டொலர் | 227.9607 | 242.2978 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.0462 | 44.3250 |
| யூரோ | 328.4622 | 346.8894 |
| ஜப்பான் யென் | 2.0968 | 2.2153 |
| சிங்கப்பூர் டொலர் | 221.8722 | 235.4053 |
| ஸ்ரேலிங் பவுன் | 382.8375 | 403.5236 |
| சுவிஸ் பிரான்ங் | 334.1795 | 356.0903 |
| ஐ.அ. டொலர் | 301.3255 | 316.7243 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 817.3193 |
| குவைட் | குவைட் தினார் | 1,002.6071 |
| ஓமான் | ஓமான் றியால் | 800.3460 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.5952 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 82.1547 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.8859 |




யாழ்ப்பாணம் – வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய 18ஆம் திருவிழா(மஞ்சம்) நேற்றுமுன்தினம் (26) திங்கட்கிழமை மாலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.





மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தின் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு 26, 27ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள் மூல மூர்த்தியாகிய செல்லக்கதிர்காம சுவாமி மற்றும் வள்ளி, தெய்வானைக்கும் நவக்கிரகம், பரிவார தெய்வங்களுக்கும் எண்ணெய்க்காப்பு சாத்தி வழிபாடு செய்தனர்.

**படப்பிடிப்பு:** மட்டக்களப்பு குருக்கள் மடம் செய்தியாளர்



சென்னை நகரில் நடைபெற்ற சர்வதேச அபாகஸ் போட்டியில் சாய்ந்தமருது தாறுல் இல்மு கல்வி நிலையத்தில் இருந்து நான்கு மாணவர்கள் பங்குபற்றினர். இதில் ஜவ்பர் பாத்திமா ரொஸினி, முஹம்மட் அனீஸ் பாத்திமா ஸிபாறா, காலிதீன் பாத்திமா லனா ஆகிய மூன்று மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று தாய்நாட்டுக்கும் கல்வி நிலையத்துக்கும் பயிற்றுவித்த ஆசிரியை ஏ.ஆர்.றிஸானா (கல்முனை ஸாஹிறா கல்லூரி கணித பாட ஆசிரியை) கல்வி பயிலும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

**படப்பிடிப்பு:** நிந்தவூர் செய்தியாளர்

# மகாவலி அதிகாரசபை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல்

கிரான் செய்தியாளர்

மகாவலி அதிகாரசபை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல்தரை பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை(26) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடல் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கருணாகரம் ஆகியோரது பங்களிப்புடன் இடம்பெற்றது.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போது மகாவலி அதிகாரசபை மற்றும் மேய்ச்சல்தரை தொடர்பிலான பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டபோது எதிர்வரும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்கு முன்னர் விசேட கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து அது தொடர்பில் ஆராய்வது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மகாவலி அதிகார சபையின் எல்லைப் பரப்புகள் மற்றும் அதன் செயற்பாடுகள், எவ்வாறான செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் என்பது தொடர்பாகவும் இதன்போது விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

மகாவலி அதிகார சபையின் வீ பிரிவுக்கான வதிவிட திட்ட முகாமையாளர் இந்திக்க ரணவீர கருத்து தெரிவிக்கையில், இனிவரும் காலங்களில் மகாவலி திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு திட்டம் தொடர்பாகவும் முடிவுகளை



மேற்கொள்ள முன்னர் மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினர் மற்றும் மாவட்ட அரச அதிபரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களைப் பின்பற்றியே தமது திட்டங்களை மேற்கொள்ள உள்ளதாக இதன்போது தெரிவித்திருந்தார்.

அத்தோடு மகாவலி காணிகளை வனவளத் திணைக்களத்துக்கு வழங்கப்படுவது தொடர்பாகவும் மாவட்ட நிர்வாகம், மாவட்ட அரசியல் பிரதிநிதிகளிடம் தெரியப்படுத்தி அவற்றின் பிரகாரம் முடிவுகளை எடுப்பது தொடர்பாகவும் இதன்போது கருத்துகள் பரிமாறப்பட்டன. மகாவலிக்குட்பட்ட வயல் காணிகள் தொடர்பாகவும் சூரிய மின் உற்பத்தி மேற்கொள்வதற்கான காணிகளை விடுவிப்பு செய்வது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இவை தொடர்பிலான இறுதித் தீர்மானம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்னெடுக்கப்படுமென இரு இராஜாங்க அமைச்சர்களினால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், இராஜாங்க அமைச்சர்களின் ஒருங்கிணைப்பாளர்கள், பிரத்தியேக செயலாளர்கள், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக உயரதிகாரிகள், மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள், பண்ணையாளர்கள் என துறைசார் அதிகாரிகள் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யோகாசன கண்காட்சி வளாக அரங்கில் நடைபெற்றது. கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய சுவாமி விவேகானந்தா கலாசார நிலைய பணிப்பாளர் பேராசிரியர் அன்குரன் டுட்டா, திருகோணமலை முதல்வர் பேராசிரியர் திருமதி சந்திரவதனி ஜீ தேவதாசன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் வைத்தியர் திருமதி ஆர்.சிறிதர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் யோகாசனத்தின் அவசியம் குறித்து பல்வேறு கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் உடல் - உள புத்துணர்ச்சிக்குத் தேவையான யோகாசன கண்காட்சி மாணவர்களினால் நிகழ்த்தப்பட்டது.

**படப்பிடிப்பு:** களுதாவளை செய்தியாளர்



# தலைமைத்துவ வழிகாட்டல் செயலமர்வை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்



திராய்க்கேணி செய்தியாளர்

கல்முனை அஹ்லுல் சுன்னத்துல் ஜமாத் உலமா சபையினரால் கல்முனை பிரதேசத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்காக நடத்தப்பட்ட மூன்றுநாள் தலைமைத்துவ வழிகாட்டல் செயலமர்வை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்முனை முஹ்ஹையதீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

கல்முனை அஹ்லுல் சுன்னத்துல் ஜமாத் உலமா சபைத் தலைவர் மௌலவி பீ.எம்.ஏ. ஜலீல் (பாஹவி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வளவாளர்களாகவும் அதிதிகளாகவும் கல்முனை வைத்தியசாலை மனோதத்துவ வைத்திய நிபுணர் டாக்டர் யு.எல்.சறாப்தீன், கல்முனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ், அஹ்லுல் சுன்னத்துல் ஜமாத் உலமாசபைச் செயலாளர் மௌலவி ஏ.எல்.நாஸர்(மன்பயி), உளவளத்துணையாளர் என்.எம்.நௌசாத், ஆசிரியர் எம்.வை.எம்.வை.இம்ரான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் மனநல உளவியல், ஆன்மீகம், கல்வி வழிகாட்டல் போன்ற தலைப்புகளில் செயலமர்வுகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பாறை உதைபந்து நடுவர்கள் அமைப்பின் பொதுச்சபைக் கூட்டம்

மாளிகைக்காடு செய்தியாளர்

அம்பாறை மாவட்ட உதைபந்து நடுவர்கள் அமைப்பின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் ஞாயிற்றுக்கிழமை(25) கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மண்டபத்தில் அமைப்பின் பதில் தலைவர் எம்.ஏ.பர்ஸான் தலைமையில் இடம்பெற்றன.

இதன்போது பிராந்திய உதைபந்து மேம்பாடு, அம்பாறை மாவட்ட உதைபந்து நடுவர்கள் அமைப்பின் எதிர்கால செயற்பாடுகள், நடுவர்கள் கௌரவிப்பு உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத்தினர் தெரிவுசெய்யப்பட்டனர். அதனடிப்படையில் போசகர்களாக சிரேஷ்ட நடுவர்களான எம்.ஏ. நபார், எம்.ஐ.எம்.அமீரலி ஆகியோரும் ஆலோசகர்களாக ஏ.எம்.எம். இப்ராஹிம், ஏ.எம்.இப்ராஹிம், ஏ.எல்.ஏ.கனி, யூ.எல்.எம்.ஹனீபா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் தலைவராக எம்.எல்.எம். ஜமால்தீன், தவிசாளராக எம்.எல்.ஏ.தாஹீர், செயலாளராக அலியார் பைஸர், பொருளாளராக எஸ்.எல்.வை.அரபாத், உப தலைவர்களாக எம்.ஏ.பர்ஸான், ஏ.எம்.றிஷாத், எஸ்.எம். உபைத்தீன், உப செயலாளராக ஏ.எம்.ஜப்றான், உப பொருளாளராக ஜே.ஏ.மஜித், கணக்கு பரிசோதகர்களாக எம்.எம்.றஜீப், ஐ.அஸ்பாக் ஆகியோர் சபையால் தெரிவுசெய்யப்பட்டனர்.



முஸ்லிம்களின் புனித ஹஜ் பெருநாள் வியாழக்கிழமை 29ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதை முன்னிட்டு தோப்பூர் பிரதேச பொதுமக்கள் ஆர்வத்துடன் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. வெளியூர் பிரதேசங்களில் இருந்து வருகைதந்திருந்த அதிகளவான வியாபாரிகள் மலிவான விலையில் பொருட்களை விற்பனை செய்தமையால் அதிகளவில் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்ததாக மக்கள் கருத்து தெரிவித்தனர்.

**படப்பிடிப்பு:** தோப்பூர்

# மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் பெருநாள் தொழுகை

மருதமுனை செய்தியாளர்

புனித ஹஜ் பெருநாள் தொழுகை மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் வியாழக்கிழமை(29) காலை 6.20 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பெரியநீலாவணை அக்பர் ஜும்ஆப்பள்ளி வாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த தொழுகையை கலாநிதி அஷ்-ஷெய்க் எம்.எல்.முபாறக் மதனி தொழுகை நடத்தி பிரசங்கமும் செய்யவுள்ளார்.

இதன்போது ஆண்களும் பெண்களும் கலந்து கொள்ள முடியும் என்பதோடு பெண்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



பாலமுனை அல்-ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் பெற்றோர்கள் மற்றும் தனவந்தர்கள், பழைய மாணவர்களினால் வழங்கப்பட்ட தளபாடங்கள், நூல்கள் என்பவற்றை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் பீ.முஹாஜிரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர்களான ஏ.எல்.பஹ்றாத், எம்.எச்.நௌபல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**படப்பிடிப்பு:** பாலமுனை செய்தியாளர்

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



பாலமுனை செய்தியாளர்

சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தல் மற்றும் விழுமிய கல்வியை முன்னுரிமைபடுத்தல் எனும் 'சமூக நல்லிணக்கம் மற்றும் சமூக மீள்தன்மையை வலுப்படுத்துதல்' வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்ட மட்ட சமூக நல்லிணக்க ஒன்றுகூடலும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை(24) நடைபெற்றது.

ஆசிய மன்றத்தின் அனுசரணையில் கெப்சோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கெப்சோ நிறுவன அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவட்ட அரச அதிபர் டக்ளஸ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனிபா, கெப்சோ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.அப்துல் ஜப்பார் உட்பட இளைஞர் மன்ற அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 300இற்கும் மேற்பட்ட இளைஞர் - யுவதிகள் கலந்து கொண்டனர். இதன்போது குறித்த வேலைத்திட்டம் தொடர்பான அனுபவப்பகிர்தல், கலை, கலாசார நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன.

கெப்சோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் மூவின மாணவர்கள், இளைஞர்-யுவதிகளுக்கான கல்வி மற்றும் இன ஐக்கிய செயற்பாடுகள், வசதி குறைந்தோருக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் மற்றும் நிதியுதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசியப் பாடசாலையிலிருந்து கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டியில் பங்குகொண்டு வெற்றியீட்டி வலய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவான மாணவர்கள், மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையில் பங்குகொண்ட மாணவர்கள் மற்றும் வலய மட்ட கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவான மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை முதல்வர் ஏ.அப்துல் கபூர் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.



ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயம் மட்டக்களப்பு - ஏறாவூர் பிரதான வீதியில் திறக்கப்பட்டுள்ளது. இதன்போது ஐம்பது தமிழ் மற்றும் முஸ்லிம் விதவைகளுக்கு உலருணவுப்பொதிகள் கையளிக்கப்பட்டன. ஐ.தே.க. அமைப்பாளர் ஏ.எம்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித றங்கே பண்டார பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

**படப்பிடிப்பு:** ஏறாவூர் செய்தியாளர்

# அஸ்வெசும திட்ட முறையற்ற பட்டியல் தயாரிப்பை மீள் பரிசீலனை செய்க

## செங்கலடி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்



களுதாவளை செய்தியாளர்

'அஸ்வெசும' சமூக நலன்புரித் திட்டத்தின் கீழ் தம்மை உள்வாங்கக்கோரி மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட பொதுமக்கள் செவ்வாய்க்கிழமை (27) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செங்கலடி பிரதான வீதியிலிருந்து பேரணியாக செங்கலடி பிரதேச செயலகம்வரை சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலக நுழைவாயிலின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அஸ்வெசும சமூக நலன்புரித் திட்டத்தின் கீழ் தம்மை உள்வாங்கக்கோரியும் முறையற்ற பட்டியல் தயாரிப்பை மீள் பரிசீலனை செய்யக்கோரியும் கோஷங்களை எழுப்பியவாறு ஈடுபட்டனர்.

இதேவேளை, சுமார் அரை மணி நேரமாகியும் அதிகாரிகள் ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகை தரவில்லை எனத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், பிரதேச செயலக வளாகத்தினுள் நுழைந்து பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது வருகை தந்த செங்கலடி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நிருத்தா பிருந்தனிடம் தமது பிரச்சினைகளைத் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திட்டமிட்ட முறையில் சமுர்த்தி பயனாளிகளின் பெயர் நீக்கப்பட்டுள்ளமை அநீதியானதாகும்

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு

கிண்ணியா செய்தியாளர்

அதிகார தரப்பினரால் நாடெங்கிலுமுள்ள இலட்சக்கணக்கான சமுர்த்திப் பயனாளிகளின் பெயர் திட்டமிட்ட முறையில் நீக்கப்பட்டுள்ளமையினால் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் உதவிச் செயலாளரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அத்தோடு, இது பெரும் அநீதி எனவும் மக்களை கஷ்டத்துக்குள் தள்ளிவிடும் இந்த மோசமான செயலைச் செய்தவர்கள் தொடர்பில் அரசாங்கம் கரிசனையின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து அவர் செவ்வாய்க்கிழமை(27) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் இலட்சக்கணக்கான ஏழை மக்கள் சமுர்த்திக் கொடுப்பனவு பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும், சில அதிகார பின்புலத்திலுள்ளவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே இந்த பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. நாடு இன்று பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையில் அப்பாவி ஏழை மக்களும் வயிற்றுப் பசியைப் போக்க பெரும் இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

அவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு ஆறுதலாக இருந்தது. எனினும், சிலர் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கமைவாக இவர்களின் சமுர்த்திக் கொடுப்பனவை நிறுத்துவதற்கு பின்புலத்தில் இருக்கின்றனர். மக்களைப் பற்றி சிந்திக்காத அதிகாரிகள் பலரும் இந்த அநியாயத்துக்கு துணைபோயுள்ளனர். சமுர்த்திக் கொடுப்பனவு பெறுபவர்களே அரசாங்கத்தால் தற்போது வழங்கப்படும் ஒருசில சலுகைகளைப் பெறத் தகுதியுள்ளவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்.

எனினும், கூடுதலான பயனாளிகளின் பெயரை நீக்கியமையால் அவர்கள் சலுகைகளைப் பெற்றுக் கொள்வது திட்டமிட்டு தடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராக அதிகார தரப்பு அநியாயமாக பட்டினிப் போராட்டத்தை முடக்கிவிட்டுள்ளது. இதனால், அந்த மக்களின் வறுமை நிலைமை மேலும் அதிகரிக்க அரசாங்கம் காரணமாக இருக்கின்றது. இதனால், அப்பாவி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தக் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையிலேயே மக்கள் இன்று வீதிக்கு இறங்கி தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநியாயத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் நியாயமான போராட்டத்துக்கு நாமும் வலுச் சேர்க்கவுள்ளோம். அத்தோடு, இதுவிடயத்தில் கண்மூடித்தனமாக நடந்துகொள்ளும் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# மட்டக்களப்பில் சர்வதேச போதைப்பொருள் விழிப்புணர்வு

கல்லடி செய்தியாளர்

சர்வதேச போதைப்பொருள், துஷ்பிரயோக தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களால் விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் மேற்பார்வையில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழிப்புணர்வு நிகழ்வு உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் தலைமையில் திங்கட்கிழமை(26) மட்டக்களப்பு காந்திப் பூங்கா முன்பாக ஆரம்பமானது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட இவ்விழிப்புணர்வு நிகழ்வில், போதைப் பொருள் புனர்வாழ்வு மையத்தின் இராணுவ அதிகாரியும் கலந்து கொண்டார். இதன்போது போதைப்பொருள் பாவனையின் விபரீதங்கள் மற்றும் சிறுவர்களுக்கு விழிப்பூட்டும் கருத்தம்சங்கள் கொண்ட பதாகைகள் மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டன. அத்தோடு விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள் பாதசாரிகள் மற்றும் வாகனங்களில் பயணித்தோருக்கு விநியோகம் செய்யப்பட்டன.




# குடும்பஸ்தர் தூக்கிட்டு தற்கொலை

## தும்பாலையில் சம்பவம்

மண்டூர் செய்தியாளர்

வெல்லாவெளி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட தும்பாலை பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் திங்கட்கிழமை(26) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தும்பாலை திக்கோடை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சிவப்பிரகாசம் சிலோஜன் என்பவரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது வீட்டை விட்டு சென்று தனது தாயாருடன் வாழ்ந்து வந்த நிலையில் ஏழு மாதங்களின் பின்னர் தனது மனைவியின் வீட்டுக்கு சம்பவ தினத்தன்று வந்திருந்த நிலையில் தனது வீட்டின் அறையினுள் தனக்குத்தானே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதத்தை பாவையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசின் நலன்புரித் திட்ட பதிவுகளில் முறைகேடு: கோறளைப்பற்று மத்தி மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்




வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

அரசாங்கத்தின் நலன்புரி உதவித்திட்ட பதிவுகளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை குறித்து கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் பிறைந்துறைச்சேனை 204 ஏ பிரிவு சமுர்த்தி பயனாளிகளால் செவ்வாய்க்கிழமை(27) காலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஓட்டமாவடி - கொழும்பு வீதியில் ஒன்றுகூடிய மக்கள் வாசகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஊர்வலமாக பிரதேச செயலகம்வரை நடந்து சென்றனர்.

அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்டக்கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளி வந்திருந்த நிலையில், இருநேரம் மட்டும் உணவை உட்கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களின் பெயர்கள் உள் வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர், வசதியானவர்களுக்கே இவ் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தே இக்கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜரை செயலக திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.றுவைஸ் பெற்றுக்கொண்டார். இதன்போது ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்டவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்துகொண்ட அவர், நலன்புரித் திட்டம் தொடர்பிலான முறைப்பாடுகளை மேன்முறையீடு செய்யலாம் என்றும் தகுதியற்றவர்கள் தொடர்பாகத் தெரியப்படுத்துமாறும் மேன்முறையீடு செய்வதற்காக அலுவலகத்தில் சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன் உடனடியாக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையினையும் மேற்கொண்டார்.

# மின்சாரம் தாக்கி மீனவர் உயிரிழப்பு

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

ஓட்டமாவடி மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காவத்தமுனையில் மீனவர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

காவத்தமுனையைச் சேர்ந்த 04 பிள்ளைகளின் தந்தையான முத்துவான் அன்சார் வயது (54) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு செவ்வாய்க்கிழமை(27) மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று மாலை வழக்கம்போல் ஓட்டமாவடி ஆற்றிலுள்ள ஆமை ஓடை குடாவில் மீன்பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பாததினால் அவரைத் தேடும் பணியில் உறவினர்கள் ஈடுபட்டபோது அவர் இறால் பண்ணைக்கு அருகாமையிலுள்ள நீரோடையில் உயிரிழந்த நிலையில் சடலமாகக் கண்டறியப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். காவத்தமுனை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தனியாருக்குச் சொந்தமான இறால் பண்ணையின் பாதுகாப்புக் கருதி வேலிகளுக்கு மின்சாரம் இணைக்கப்பட்டுள்ளது. குறித்த மின்சார இணைப்பானது இறால் பண்ணைக்கு அப்பாலுள்ள நீரோடைக்கு குறுக்காகவும் இணைக்கப்பட்டுள்ளது. இவ் ஓடையில் பொதுமக்கள் தங்களது நாளாந்த உணவுக்காக மீன்பிடிப்பது வழக்கமாகும். விடயம் தெரியாத நபர் இச் சட்டவிரோத மின்சார இணைப்பில் அகப்பட்டு உயிரிழந்துள்ளதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

குறித்த இறால் பண்ணை உரிமையாளர் மேற்கொண்ட மின் இணைப்புக்கு எதிராக அங்கிருந்தவர்கள் விசனம் தெரிவித்து எதிர்ப்பில் ஈடுபட்ட அதேவேளை, இறால் பண்ணை தவிர்ந்த பொதுமக்கள் பாவிக்கும் பொது இடங்களில் மின்சாரம் வழங்குவதைத் தடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர். இதேவேளை, கடந்த காலத்தில் குறித்த இடத்தில் மின்சாரம் தாக்கி யானை ஒன்றும் 03 கால்நடைகளும் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**சமூக நலன்புரி கொடுப்பனவில் பாதிக்கப்பட்ட மக்கள் மேன்முறையீட்டை மேற்கொள்வதற்காக தோப்பூர் உப பிரதேச செயலகத்தில் பெருந்திரளான மக்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க செவ்வாய்க்கிழமை(27) சென்றிருந்தனர். தோப்பூர் உப பிரதேச செயலகத்துக்குட்பட்ட 12 கிராம சேவையாளர் பிரிவில் பள்ளிக்குடியிருப்பு மற்றும் மேன்கமம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் மேன்முறையீட்டை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நாளொன்றுக்கு இரண்டு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் மேன்முறையீட்டை முன்வைக்க பிரதேச செயலகம் ஒழுங்குபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.** **படப்பிடிப்பு: தோப்பூர்**

# திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்ற அஸ்வெசும மேன்முறையீட்டுப் பணிகள்

திருக்கோவில் மேலதிக செய்தியாளர்

'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள், கொடுப்பனவு தொடர்பில் தகுதியான நபர்களின் பெயர்ப் பட்டியலில் இடம்பெறாமை தொடர்பில் மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறித்த கொடுப்பனவு பெறத் தகுதியான நபர்கள் மற்றும் குடும்பங்களை அடையாளம் காணுதல் தொடர்பான ஆட்சேபனைகள் மற்றும் உரிமை கோரிக்கைகள் (மேன்முறையீடுகள்) தெரிவிப்பதற்குரிய வசதிகள் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 22 கிராம சேவகர் பிரிவுகளும் 05 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நாட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மக்களுக்கான தீர்வுகள் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் முழு கண்காணிப்பின் கீழ் இடம்பெற்று வருகின்றது. அந்த வகையில், இதுவரை 03 பகுதியினருக்கு குறித்த மேன்முறையீடு செய்யும் பணி நிறைவடைந்ததுடன் நேற்று செவ்வாய்க்கிழமை(27) 04ஆம் பிரிவினருக்கான மேன்முறையீடு செய்யும் பணி இடம்பெற்றது.

இன்று புதன்கிழமை குறித்த பணி நிறைவடையவுள்ள நிலையில் உகந்தை, கதிர்காமம் சென்றவர்களின் நன்மைகருதி மேலும் இரண்டு வேலை நாட்கள் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.



# சமூக சீர்திருத்தத்துக்கு பங்காற்றிய மௌலவி ஹனிபாவின் மறைவு பேரிழப்பு

## அம்பாறை ஜம்இய்யத்துல் உலமா அனுதாபம்

சாய்ந்தமருது செய்தியாளர்

சன்மார்க்க வளர்ச்சிக்காகவும் சமூக சீர்திருத்தத்துக்காகவும் தியாக மனப்பாங்குடன் பெரும் பங்காற்றிய காத்தான்குடி ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவரும் மத்ரஸத்து ஷபிலுர் றஷாத் அரபுக் கல்லூரி அதிபருமான மௌலவி பி.எம்.ஹனிபா (ஆதம்லெப்பை) ஹஸ்ரத்தின் மறைவு, சமூகத்துக்கு பேரிழப்பாகும் என்று அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா தெரிவித்துள்ளது.

மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் சார்பில் அதன் தலைவர் யூ.எல்.எம்.ஹாஷிம் மௌலவி, செயலாளர் ஏ.எல்.நாசிர்கனி மௌலவி ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிழக்கு மாகாணத்தின் மூத்த ஆலிம்களில் ஒருவரான ஆதம்லெப்பை ஹஸ்ரத் எப்போதும் தஃவாப் பணிக்கே முன்னுரிமை கொடுத்து வந்துள்ளார். அன்னாருடைய மார்க்க சொற்பொழிவுகள், மக்களின் உள்ளங்களை ஆழ ஊடுருவும் வகையில் உயிரோட்டமிக்கவையாக அமையப் பெற்றிருந்தன.



காத்தான்குடியிலுள்ள பலாஹ் அரபுக் கல்லூரி மற்றும் மர்கஸ் ஸபீலுர் ரஷாத் அறபுக் கல்லூரி என்பவற்றின் வளர்ச்சியிலும் அங்கிருந்து நூற்றுக்கணக்கான உலமாக்களை பிரசவிப்பதிலும் அன்னார் முன்னின்று உழைத்துள்ளார். மார்க்கக் கல்விக்காகவும் தஃவா எனும் இஸ்லாமிய பிரசாரப் பணிக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு தலைசிறந்த சன்மார்க்க அறிஞராகத் திகழ்ந்த அன்னார் சமூக ஒற்றுமை, இன ஐக்கியம் மற்றும் சகவாழ்வைப் பலப்படுத்துகின்ற விடயங்களிலும் கரிசனையுடன் பங்காற்றி வந்திருக்கிறார். அன்னாரது இழப்பு சமூகத்தில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



**மீண்டும் ஒரு 'அரகலய' போராட்டம் வெடிக்குமாம் எண்டு வவுனியா முன்னாள் எம்.பித்தம்பி சிவசக்தி ஆனந்தன் முந்தநாள் காரைதீவுல நடந்த மறைந்த ஈபீஆர்எல்எவ் தோழர் பத்மநாபா ஞாபக கூட்டத்தில வெளுத்து வாங்கியிருக்காரு எலுவா.. ? அவரு சொன்னா கட்டாயம் செய்வார். ஏன் தெரியுமா..? ஏற்கனவே நல்லாட்சிகாலத்தில TNA சம்மந்தரோட போராடின அனுபவம் இவருக்கு இருக்கு. இனி TNA செல்வத்தாரோட போராடப்போறாரோ இல்லாட்டி ஸ்ரீ காந்தா, சிவாஜிலிங்கம் கட்சியோட போராடப்போறாரோ பாப்பம் அடுத்த எலக்சன் வரையும் ஆரோட மல்லுக்கட்டப்போறார் எண்டத.!**

# பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பாகிஸ்தானிடம் அமெரிக்கா வலியுறுத்து



பாரதப் பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் அமெரிக்கா சென்றபோது இந்தியா-அமெரிக்கா சார்பில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில், இந்தியாவைக் குறிவைத்து தாக்குதல் நடத்தும் பயங்கரவாதிகளை பாகிஸ்தான் ஒடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இந்தியாவுடன் இணைந்து பாகிஸ்தானுக்கு எதிராக அமெரிக்கா அறிக்கை வெளியிட்டதால் அதிருப்தியடைந்த பாகிஸ்தான், இது தொடர்பாக இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூதுவருக்கு கடிதம் அனுப்பியது.

இதனையடுத்து பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சுக்கு அமெரிக்க துணைத் தூதுவர் சென்றார். அப்போது அவரிடம் இந்தியாவுடன் இணைந்து அமெரிக்கா வெளியிட்ட கூட்டறிக்கை தேவையற்றது; ஒருதலைப்பட்சமானது; தவறாக வழிநடத்தக்கூடியது; அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பாகிஸ்தானுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எதிர்வரும் காலங்களில் இதுபோன்று பாகிஸ்தானுக்கு எதிராக செயற்படுவதை அமெரிக்கா தவிர்க்க வேண்டும். பாகிஸ்தான் - அமெரிக்கா இடையே பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு நன்றாக முன்னேறி வருகிறது. பாகிஸ்தான்-அமெரிக்கா இடையேயான உறவை மேலும் வலுப்படுத்த நம்பிக்கை மற்றும் புரிதலை மையமாகக் கொண்ட ஒரு சூழல் இன்றியமையாதது" - என்று பாகிஸ்தான் வெளியுறவுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர், "பிராந்தியம் முழுவதும் பயங்கரவாதிகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை எதிர்கொள்ள பாகிஸ்தானுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா உறுதியாக இருக்கிறது. பல ஆண்டுகளாக பயங்கரவாத தாக்குதல்களால் பாகிஸ்தான் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் போர்நிறுத்தத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் கடைப்பிடித்து வருவதற்காக இரு நாடுகளையும் அமெரிக்கா பாராட்டுகிறது"- என்றார்.

## உலக செய்திகள்



நியூயோர்க்கில் நடைபெற்ற கலாசார விழாவில் பங்கேற்றிருந்த பெண்ணொருவர் நீச்சல் தடாகத்தில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

## தமிழக முதல்வர் தலைமையில் ரூ.1,500 கோடி முதலீட்டு ஒப்பந்தம்



சென்னை வர்த்தக மையத்தில் நேற்று நடைபெற்ற பன்னாட்டு குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தின விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ரூ.1,510 கோடிக்கான தொழில் முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதிலும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, ஆண்டுதோறும் ஜூன் 27 ஆம் திகதி பன்னாட்டு குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினமாக கொண்டாடப்படுகிறது. இதையடுத்து, இதை அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

அதன்படி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பன்னாட்டு குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தின விழா நேற்றுக் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த விழாவில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்கீழ் முதல் 100 பயனாளிகளுக்கு ரூ.57.55 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழில் தொடங்க ரூ.18.94 கோடி மானியத்துக்கான ஆணைகளை வழங்கி திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார்.

# போர் முடிந்ததன் பின்னரே ஜனாதிபதித் தேர்தல்

## ஸெலென்ஸ்கி அதிரடி அறிவிப்பு



போர் முடிவுக்கு வரும்வரை நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படமாட்டாது என உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஸெலென்ஸ்கி கூறியுள்ளார். இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடையவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா போரை தொடங்கி சுமார் 16 மாதங்கள் ஆகியுள்ளன. ஆனாலும், போரின் வீரியம் குறைந்தபாடில்லை. இந்தப் போரில் தற்போது வரை சுமார் 9 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 15 ஆயிரத்து 779 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இதர ஐரோப்பிய நாடுகள் பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளை வழங்கி வருகிறது. இரு நாடுகளும் போரைக் கைவிட்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்பதுதான் அனைவரினதும் கோரிக்கையாக இருந்து வருகிறது.

இந்நிலையில், அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஸெலென்ஸ்கியின் பதவிக்காலம் முடிவுக்கு வருகிறது. ஆனால், போர் நடந்துகொண்டிருப்பதால் இதற்கான தேர்தல் நடப்பது சந்தேகமாகவே இருந்து வந்தது. தற்போது இதனை ஸெலென்ஸ்கி உறுதி செய்திருக்கிறார். இது குறித்து அவர் கூறியதாவது, "நாட்டில் இராணுவச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்படக்கூடாது என்று எங்கள் அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. போர் முடிந்த பின்னர் 90 நாட்களுக்கு பிறகுதான் அதிபர் தேர்தல் நடத்தப்படும்" என்று கூறியுள்ளார்.

# 2023ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் போட்டி அட்டவணை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது



ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023

FIXTURES

5 OCTOBER - 19 NOVEMBER 2023

| | | | | |
|---|---|---|---|---|
| Thursday, 5 October | ENGLAND | v | NEW ZEALAND | Ahmedabad |
| Friday, 6 October | PAKISTAN | v | QUALIFIER 1 | Hyderabad |
| Saturday, 7 October | BANGLADESH | v | AFGHANISTAN | Dharamsala |
| Saturday, 7 October | SOUTH AFRICA | v | QUALIFIER 2 | Delhi |
| Sunday, 8 October | INDIA | v | AUSTRALIA | Chennai |
| Monday, 9 October | NEW ZEALAND | v | QUALIFIER 1 | Hyderabad |
| Tueday, 10 October | ENGLAND | v | BANGLADESH | Dharamsala |
| Wednesday, 11 October | INDIA | v | AFGHANISTAN | Delhi |
| Thursday, 12 October | PAKISTAN | v | QUALIFIER 2 | Hyderabad |
| Friday, 13 October | AUSTRALIA | v | SOUTH AFRICA | Lucknow |
| Saturday, 14 October | ENGLAND | v | AFGHANISTAN | Delhi |
| Saturday, 14 October | NEW ZEALAND | v | BANGLADESH | Chennai |
| Sunday, 15 October | INDIA | v | PAKISTAN | Ahmedabad |
| Monday, 16 October | AUSTRALIA | v | QUALIFIER 2 | Lucknow |
| Tueday, 17 October | SOUTH AFRICA | v | QUALIFIER 1 | Dharamsala |
| Wednesday, 18 October | NEW ZEALAND | v | AFGHANISTAN | Chennai |
| Thursday, 19 October | INDIA | v | BANGLADESH | Pune |
| Friday, 20 October | AUSTRALIA | v | PAKISTAN | Bengaluru |
| Saturday, 21 October | ENGLAND | v | SOUTH AFRICA | Mumbai |
| Saturday, 21 October | QUALIFIER 1 | v | QUALIFIER 2 | Lucknow |
| Sunday, 22 October | INDIA | v | NEW ZEALAND | Dharamsala |
| Monday, 23 October | PAKISTAN | v | AFGHANISTAN | Chennai |
| Tueday, 24 October | SOUTH AFRICA | v | BANGLADESH | Mumbai |
| Wednesday, 25 October | AUSTRALIA | v | QUALIFIER 1 | Delhi |
| Thursday, 26 October | ENGLAND | v | QUALIFIER 2 | Bengaluru |
| Friday, 27 October | PAKISTAN | v | SOUTH AFRICA | Chennai |
| Saturday, 28 October | QUALIFIER 1 | v | BANGLADESH | Kolkata |
| Saturday, 28 October | AUSTRALIA | v | NEW ZEALAND | Dharamsala |
| Sunday, 29 October | INDIA | v | ENGLAND | Lucknow |
| Monday, 30 October | AFGHANISTAN | v | QUALIFIER 2 | Pune |
| Tueday, 31 October | PAKISTAN | v | BANGLADESH | Kolkata |
| Wednesday, 1 November | NEW ZEALAND | v | SOUTH AFRICA | Pune |
| Thursday, 2 November | INDIA | v | QUALIFIER 2 | Mumbai |
| Friday, 3 November | QUALIFIER 1 | v | AFGHANISTAN | Lucknow |
| Saturday, 4 November | ENGLAND | v | AUSTRALIA | Ahmedabad |
| Saturday, 4 November | NEW ZEALAND | v | PAKISTAN | Bengaluru |
| Sunday, 5 November | INDIA | v | SOUTH AFRICA | Kolkata |
| Monday, 6 November | BANGLADESH | v | QUALIFIER 2 | Delhi |
| Tueday, 7 November | AUSTRALIA | v | AFGHANISTAN | Mumbai |
| Wednesday, 8 November | ENGLAND | v | QUALIFIER 1 | Pune |
| Thursday, 9 November | NEW ZEALAND | v | QUALIFIER 2 | Bengaluru |
| Friday, 10 November | SOUTH AFRICA | v | AFGHANISTAN | Ahmedabad |
| Saturday, 11 November | INDIA | v | QUALIFIER 1 | Bengaluru |
| Sunday, 12 November | ENGLAND | v | PAKISTAN | Kolkata |
| Sunday, 12 November | AUSTRALIA | v | BANGLADESH | Pune |
| Wednesday, 15 November | SEMI FINAL 1 | | | Mumbai |
| Thursday, 16 November | SEMI FINAL 2 | | | Kolkata |
| SUNDAY, 19 NOVEMBER | FINAL | | | AHMEDABAD |

## முன்னாள் உலக சம்பியனுக்கு அதிர்ச்சி கொடுத்த நெதர்லாந்து



முன்னாள் உலக சம்பியனான மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் சுப்பர் ஓவர் முறையில் நெதர்லாந்து அணி த்ரில் வெற்றி பெற்றது.

ஐ.சி.சி உலகக்கிண்ண தகுதிச்சுற்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழு ஏ யிற்கான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதின. முதலில் ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 6 விக்கெட் இழப்புக்கு 374 ஓட்டங்களைக் குவித்தது. அதன் பின்னர் களமிறங்கிய நெதர்லாந்து அணியும் 50 ஓவர்களில் 374 ஓட்டங்கள் எடுத்ததால் ஆட்டம் சமநிலையானது.

இதன் காரணமாக சுப்பர் ஓவர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. முதலில் களமிறங்கிய நெதர்லாந்து ஒரு ஓவரில் 30 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் வான் பீக் 3 சிக்ஸர், 3 பவுண்டரிகளை விளாசினார். பின்னர் ஆடிய மே.தீவுகள் 5 பந்துகளில் 2 விக்கெட்டுகளை இழந்து 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து படுதோல்வியடைந்தது. ஒரே ஓவரில் 30 ஓட்டங்கள் எடுத்ததுடன், சுப்பர் ஓவரை வீசி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய லோகன் வான் பீக் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

## காத்தான்குடி மத்திய கல்லூரியின் 93ஆவது வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி

வாழைச்சேனை செய்தியாளர்

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரியின் 93ஆவது வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு நிகழ்வு அண்மையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் எம்.ஏ.நிஹால் அஹமட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். மேலும் காத்தான்குடி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எப்.சில்மியா, காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி எம்.எம்.கலாவூதீன், பாடசாலை முன்னாள் அதிபர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள், கல்வியலாளர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழுவினர், பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் றூமி இல்லம் (நீலம்) 256 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், இக்பால் இல்லம் (சிவப்பு) 207 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், ஓமர் இல்லம் (பச்சை) 203 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.



இதன்போது வெற்றி பெற்ற இல்லங்கள் அடிப்படையில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கி வைக்கப்பட்டதுடன், மரதம் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## ஒரு இலட்சத்து 20 ஆயிரம் அடி அந்தரத்தில் மிதந்த உலகக்கிண்ணம்

2023 ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடருக்கான வெற்றிக்கிண்ணம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. இந்தியாவில் ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டியை பிரபல்யப்படுத்த சர்வதேச கிரிக்கெட் பேரவையும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையும் வித்தியாசமாக பிரமிக்கத்தக்க வகையில் ஒரு முயற்சியை எடுத்துள்ளது. அதாவது, விசேட பலூனில் கிண்ணத்தை வைத்து அதை விண்வெளிக்கு அனுப்பியது. அது பூமியில் இருந்து சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் அடி உயரத்தில் பூமியின் வளிமண்டலத்தின் விளிம்பில் நிலை நிறுத்தப்பட்டது.

அதில் பொருத்தப்பட்டிருந்த விசேட கேமரா, பல்வேறு கோணங்களில் புகைப்படங்களை எடுத்து அனுப்பியது. அந்தரத்தில் மிதந்த உலகக்கிண்ணம் பிறகு அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் வெற்றிகரமாகத் தரை இறங்கியது. விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் அதிகாரபூர்வ விளையாட்டுக் கிண்ணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



## ஒருநாள் கிரிக்கெட்டில் வரலாறு படைத்த சிம்பாப்வே

ஐக்கிய அரபு இராச்சிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் சிம்பாப்வே அணி 304 ஓட்டங்களினால் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் சாதனை வெற்றியைப் பதிவு செய்தது.

ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடரின் போட்டியில் 304 ஓட்டங்களால் அமெரிக்க அணியை சிம்பாப்வே இலகுவாக வீழ்த்தியது. சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஓட்டங்கள் ரீதியில் சிம்பாப்வே ஈட்டிய மிகப் பெரிய வெற்றி இதுவாகும். அத்துடன் ஒட்டுமொத்த வெற்றிகளில் இரண்டாவது பெரிய வெற்றியும் இதுவாகும்.

திருவனந்தபுரத்தில் இந்த வருட முற்பகுதியில் இலங்கைக்கு எதிரான போட்டியில் 317 ஓட்டங்களால் இந்தியா ஈட்டிய வெற்றியே ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் ஓட்டங்கள் ரீதியில் ஈட்டப்பட்ட மிகப் பெரிய வெற்றியாகும்.

குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 408 ஓட்டங்களைக் குவித்தது. இந்த மொத்த எண்ணிக்கையானது சிம்பாப்வேயினால் சர்வதேச ஒருநாள் போட்டியில் பெறப்பட்ட அதிகூடிய எண்ணிக்கையாகும்.

409 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அமெரிக்கா 25.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்களை மாத்திரம் பெற்று படுதோல்வியடைந்தது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7